# பகுதி-அ இலக்கணம்

## எழுத்து இலக்கணம்

★ தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் ★ எழுத்துகளின் பிறப்பு ★ முதலெழுத்துகள் மற்றும் சார்பெழுத்துகள் ★ புணர்ச்சி ★ மொழி முதல் எழுத்துகள், இறுதி எழுத்துகள், இடை எழுத்துகள் ★ இன எழுத்துகள் ★ சுட்டு எழுத்துகள் ★ வினா எழுத்துகள் ★ மயங்கொலிகள்

## சொல் இலக்கணம்

**I. இலக்கணவகைச் சொற்கள்**

★ பெயர்ச்சொல் ★ வினைச்சொல் ★ இடைச்சொல் ★ உரிச்சொல் மற்றும் அவற்றின் வகைகள்

**II. இலக்கியவகைச் சொற்கள்**

★ இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ★ ஆகுபெயர் ★ இரட்டைக் கிளவி ★ அடுக்குத்தொடர் ★ வேற்றுமை ★ ஓரெழுத்து ஒருமொழி ★ பகுபதம் ★ பகாப்பதம் ★மூவகை மொழிகள் ★ வழக்கு.

## பொது இலக்கணம்

★ வழாநிலை, வழு, வழுவமைதி ★ தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் ★ வினா வகைகளும் விடை வகைகளும் ★ பொருள்கோள் மற்றும் அதன் வகைகள்

## பொருள் இலக்கணம்

★ அகப்பொருள் ★ புறப்பொருள்

## யாப்பு இலக்கணம்

★ யாப்பின் உறுப்புகள், அலகிடுதல், பா வகைகள் மற்றும் அவற்றின் பொது இலக்கணம்

## அணி இலக்கணம்

★ இயல்பு நவிற்சி அணி ★ உயர்வு நவிற்சி அணி ★ உவமையணி ★ எடுத்துக்காட்டு உவமையணி ★ இல்பொருள் உவமையணி ★ உருவக அணி ★ ஏகதேச உருவக அணி ★ வேற்றுமை அணி ★ பிறிதுமொழிதல் அணி ★ நிரல்நிறை அணி ★ வேற்றுமைப்பொருள் வைப்பணி ★ தற்குறிப்பேற்ற அணி ★ வஞ்சப் புகழ்ச்சி அணி ★ இரட்டுறமொழிதல் அணி ★ சொல் பின்வரு நிலையணி ★ பொருள் பின்வரு நிலையணி ★ சொற்பொருள் பின்வரு நிலையணி ★ மடக்கணி ★ தீவக அணி ★ இலேச அணி

## மொழித்திறன்

★ வல்லினம் மிகும் இடங்கள் மற்றும் மிகா இடங்கள், தொடர் இலக்கணம்

★ பிரித்து எழுதுதல் மற்றும் சேர்த்தெழுதுதல் ★ எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல் ★ பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல் ★ மரபுப்பிழைகள் மற்றும் வழூஉச் சொற்களை நீக்குதல் ★ மரபுப் பெயர்கள் ★ பிறமொழிச் சொற்களை நீக்குதல் ★ பிழை திருத்தம் ★ ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைக் கண்டறிதல்.

## இலக்கணக்குறிப்பு அறிதல்

**★ பெயர்ச்சொல்லின் வகைகள்**

**★ எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிதல்**

**★ தொடை வகைகள்**

www.surabooks.com



enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



# பகுதி அ - இலக்கணம்

## எழுத்து இலக்கணம்

### தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

**தமிழ்மொழியின் இலக்கண வகைகள் ஐந்து**


1. எழுத்து இலக்கணம்
2. சொல் இலக்கணம்
3. பொருள் இலக்கணம்
4. யாப்பு இலக்கணம்
5. அணி இலக்கணம

**எழுத்து**

ஒலி வடிவமாக எழுப்பப்படுவதும் வரிவடிவமாக எழுதப்படுவதும் எழுத்து ஆகும்.

**உயிர் எழுத்துகள்**

'அ' முதல் 'ஔ' வரையுள்ள 12 உயிர் எழுத்துகளும் வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் பிறக்கின்றன. இயல்பாகக் காற்று வெளிப்படும் போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன.




**மெய் எழுத்துகள்**

க், ச், ட், த், ப், ற் – வல்லின எழுத்துகள்
ங், ஞ், ண், ந், ம், ன் – மெல்லின எழுத்துகள்
ய், ர், ல், வ், ழ், ள் – இடையின எழுத்துகள்

**உயிர் மெய் எழுத்துகள்**

✦ உயிர் எழுத்துகள் பன்னிரெண்டும் மெய் எழுத்துகள் பதினெட்டும் சேர்ந்து உருவாகும் 216 எழுத்துகளும் உயிர் மெய் எழுத்துகள் ஆகும்.
✦ மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்து உருவாகும் எழுத்துகள் உயிர்மெய்க் குறில் ஆகும். உயிர் மெய்க்குறில் 18 × 5 = 90 எழுத்துகள்.
✦ மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்து உருவாகும் எழுத்துகள் உயிர்மெய் நெடில் ஆகும். உயிர் மெய் நெடில் 18 × 7 = 126 எழுத்துகள்.
✦ மெய்யெழுத்துகளின் ஒலி வடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.
✦ வரிவடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும்.
✦ ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்திருக்கும்.

**ஆய்த எழுத்து**

ஆய்த எழுத்து (ஃ) = 1


**மாத்திரை**

மாத்திரை என்பது கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கும் நொடிப் பொழுதாகும்.

| எழுத்துகள் | மாத்திரை அளவு |
|---|---|
| குறில் | 1 |
| நெடில் | 2 |
| மெய் | ½ |
| ஆய்தம் | ½ |
| மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம் | ¼ |
| குற்றியலுகரம், குற்றியலிகரம் | ½ |
| ஐகாரக்குறுக்கம் | 1 அல்லது 1½ |
| ஔகாரக்குறுக்கம் | 1 |
| உயிரளபெடை | 3 |
| ஒற்றளபெடை | 1 |

(எ.கா)
கபிலர் : 1 + 1 + 1 + ½ = 3½ மாத்திரை.

### எழுத்துகளின் பிறப்பு




ஒலி எழக் காரணமான காற்று நிலைபெறும் இடங்களைக் காற்றறைகள் எனவும், ஒலி எழுவதற்குத் துணை செய்யும் உறுப்புகளை ஒலிப்புமுனைகள் எனவும் கூறுவர்.

**முதலெழுத்துகளின் இடப்பிறப்பு**

✦ பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், இடையின எழுத்துகள் ஆறும் கழுத்திலிருந்து பிறக்கின்றன.
✦ மெல்லின எழுத்துகள் ஆறும் மூக்கிலிருந்து பிறக்கின்றன.
✦ வல்லின எழுத்துகள் ஆறும் மார்பிலிருந்து பிறக்கின்றன.

**ஆவி இடைமை இடமிடறு ஆகும்**
**மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை. - நன்னூல்,** 75
(ஆவி – உயிரெழுத்து; இடைமை – இடையினம்; மிடறு – கழுத்து; மென்மை – மெல்லினம்; உரம் – மார்பு.)

**முதலெழுத்துகளின் முயற்சிப் பிறப்பு**

**உயிர் - பன்னிரண்டு**

**அவற்றுள்,**
**முயற்சியுள் அஆ அங்காப் புடைய. - நன்னூல்,** 76
**(அங்காப்பு - வாயைத் திறத்தல்)**

✦ அ, ஆ ஆகிய இவ்விரண்டு உயிர்களும் வாயைத் திறந்து ஒலிப்பதனால் பிறக்கின்றன.

**இஈ எஏ ஐஅங் காப்போ(டு)**
**அண்பல் முதல்நா விளிம்புற வருமே - நன்னூல்,** 77

✦ இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்து எழுத்துகளும் வாயைத் திறப்பதனோடு மேல்வாய்ப் பல்லை நாவிளிம்பு தொடுவதனால் தோன்றுன்றன.

**உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ் குவிவே. - நன்னூல்,** 78

✦ உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து எழுத்தும் உதடுகளைக் குவித்து ஒலிப்பதனால் தோன்றுகின்றன.



enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



**மெய் - பதினெட்டு**

**கஙவும் சஞவும் டணவும் முதலிடை**
**நுனிநா அண்ணம் உறமுறை வருமே**
**- நன்னூல், 79**

நா – நாக்கு; அண்ணம் – மேல்வாய்ப் பகுதி; க, ங, ச, ஞ, ட, ண என்னும் உயிர்மெய்கள் – க், ங், ச், ஞ், ட், ண் என்னும் மெய்களைக் குறிக்கும்.

✦ க், ங் – இவ்விரு மெய்களும் நாவினது முதற்பகுதி அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

✦ ச், ஞ் – இவ்விரு மெய்களும் இடைநா (நடு நா), நடு அண்ணத்தைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

✦ ட், ண் – இவை நாவினது நுனி, அண்ணத்தின் நுனியைத் தொடுவதனால் தோன்றுன்றன.

**அண்பல் அடிநா முடியுறத் தந வரும் - நன்னூல், 80**

✦ த், ந் – மேல்வாய்ப் பல்லின் அடியை, நாக்கின் நுனி பொருந்துவதனால் இவ்வெழுத்துகள் தோன்றுகின்றன.

**மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும். - நன்னூல், 81**

✦ ப், ம் – மேல் உதடும் கீழ்உதடும் பொருந்த இவை தோன்றும்.

**அடிநா அடியண்ணம் உறயத் தோன்றும். - நன்னூல், 82**

✦ ய் – இது நாக்கின் அடிப்பகுதி, மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதனால் தோன்றுகிறது.

**அண்ணம் நுனிநா வருட ரழவரும். - நன்னூல், 83**

✦ ர், ழ் – இவை மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதனால் பிறக்கின்றன.

**அண்பல் முதலும் அண்ணமும் முறையின்**
**நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்**
**லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும் - நன்னூல், 84**

✦ ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை, நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குவதனால் பிறக்கிறது.

✦ ள் – இது மேல்வாயை நாவின் ஓரங்கள் தடித்துத் தடவுவதனால் பிறக்கிறது.

**மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே - நன்னூல், 85**

✦ வ் – இது மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கிறது.

**அண்ணம் நுனிநா நனியுறின் றனவாகும். - நன்னூல், 86**

✦ ற்,ன் – இவை மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதனால் பிறக்கின்றன.

### சார்பெழுத்துகளின் இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு

ஆய்தமாகிய சார்பெழுத்து, தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது. அதன் முயற்சிப் பிறப்பு வாயைத் திறந்து ஒலித்தலே ஆகும். பிற சார்பெழுத்துகள் யாவும், தத்தம் முதலெழுத்துகள் தோன்றுதற்குரிய இடத்தையும், அவை பிறத்தற்குரிய முயற்சியையும் தமக்கு உரியனவாகக் கொண்டு ஒலிக்கின்றன.

| சொல் | முதலில் ஆளப்பட்ட இலக்கியம் | மேற்கோள் |
|---|---|---|
| தமிழ் | தொல்காப்பியம் | தமிழென் கிளவியும் அதனோ ரற்றே |
| தமிழ்நாடு | சிலப்பதிகாரம் (வஞ்சிக்காண்டம்) | **இ**மிழ்கடல் வேலியைத் **தமிழ்**நாடு ஆக்கிய **இதுநீ** கருதினை ஆயின் |
| தமிழன் | அப்பர் தேவாரம் | தமிழன் கண்டாய் |

## முதலெழுத்துகள் மற்றும் சார்பெழுத்துகள்

எழுதப்படுகின்ற காரணத்தினால் இவை எழுத்தாகும். (சித்திரிக்கப்படுவது – சித்திரம்; கட்டப்படுவது – கட்டடம்) போன்று எழுத்தானது இரண்டு வகைப்படும். அவை முதலெழுத்து, சார்பெழுத்து என்பனவாகும்.

### முதலெழுத்துகள்

மொழிக்கு முதற்காரணமாகவும் பிற எழுத்துகள் தோன்றவும் இயங்கவும் காரணமாக இருக்கும் எழுத்துகள் முதலெழுத்துகள் ஆகும்.

12 உயிரெழுத்துகள் மற்றும் 18 மெய்யெழுத்துகள் சேர்ந்து முதலெழுத்துகள் 30 ஆகும்.

### உயிரெழுத்துகள்

பிற ஒலிகளின் துணை இல்லாமல் தானே இயங்கவல்லது; மற்ற மெய்யொலிகளுடன் சேர்ந்து அவற்றை இயக்கவல்லது. நம்முடைய உயிரைப் போன்று தானே இயங்கவும், இயக்கவும் செயல்படுகின்ற காரணத்தினால் இதற்கு உயிரெழுத்து என்று பெயர்.

இவை பன்னிரண்டு எழுத்துகள் ஆகும். அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பனவாகும்.

### மெய்யெழுத்துகள்

தனித்து இயங்க முடியாதது; பிற உயிர் ஒலிகளின் துணை கொண்டே இயங்க வல்லது. நம்முடைய உடம்பினைப் போன்றே தானே இயங்கவும், இயக்கவும் இயலாத காரணத்தினால் இதற்கு மெய்யெழுத்து என்று பெயர். உடம்பெழுத்து என்றும் கூறுவர். உயிர், உடம்பினைச் செயல்படுத்துவது போன்று, உயிர் எழுத்துகளே இவ்வெழுத்துகளுடன் சேர்ந்து செயல்புரிய வேண்டும்.

இவை பதினெட்டு எழுத்துகளாகும். அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பனவாம். இந்த மெய்யெழுத்துகள் மூன்று வகைப்படும். அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பனவாகும்.

### வல்லினம்

ஒலிக்கும் பொழுது சிறிது முயற்சியுடன் வன்மையாக ஒலிக்கப்படுகின்ற காரணத்தினால் இவ்வொலிகளுக்கு வல்லினம் என்று பெயர். அவ்வொலிகளைக் கொண்ட எழுத்துகளுக்கு வல்லின எழுத்துகள் என்று பெயர்.

**அவை:–** க், ச், ட், த், ப், ற் என்பன.

### மெல்லினம்

ஒலிக்கும்பொழுது அவ்வளவான முயற்சி எதுவும் இல்லாமல் மென்மையாக ஒலிக்கப்படுகின்ற காரணத்தினால் இதற்கு மெல்லினம் என்று பெயர்.

**அவை:–** ங், ஞ், ண், ந், ம், ன் என்பன.

### இடையினம்

வன்மையாக ஒலிக்கப்படுவதற்கும், மென்மையாக ஒலிக்கப்படுவதற்கும் இடைப்பட்டு ஒலிக்கப்படுகின்ற காரணத்தினால் இதற்கு இடையினம் என்று பெயர்.

**அவை :–** ய், ர், ல், வ், ழ், ள் என்பனவாகும்.

## சார்பெழுத்துகள்

தொல்காப்பியர் கூறும் **சார்பெழுத்துகள் (3)** குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்

**நன்னூலார் பத்துச் சார்பெழுத்துகளைக்** கூறுகின்றார்.

முதலெழுத்துகளாகிய உயிர் எழுத்துகளும், மெய்யெழுத்துகளும் சேருகின்ற காரணத்தினால் உயிர்மெய்யெழுத்துகள் தோன்றுகின்றன. இவை தனித்தே தோன்றும் எழுத்துகள் அல்ல. உயிர் எழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் புணரச் செய்வதால் அவற்றைச் சார்ந்து பிறக்கின்றன. இவற்றோடு ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம், உயிரளபெடை, ஒற்றளபெடை முதலிய எழுத்துகளும் முதலெழுத்துகளோடு சார்ந்து பிறக்கின்றன. இவ்வெழுத்துகள் எல்லாம் முதலெழுத்துகளோடு சார்ந்து பிறப்பதால் இவற்றிற்குச் சார்பெழுத்துகள் என்று பெயர். நன்னூலார் பத்துச் சார்பெழுத்துகளைக் கூறுகின்றார். அவை:

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்தாகும். தொல்காப்பியர் மூன்று என்பார்.



enquiry@surabooks.com Ph: 9840455556

# அணி இலக்கணம்

பாடலில் அமையும் அழகு நலமே அணி எனப்படும்.

**இயல்பு நவிற்சி அணி**

உள்ளதை உள்ளவாறு இயற்கைத் தன்மை மாறாமல் அழகுபடக் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும்.

**(எ.கா):** **''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமம் துடைத்தவர் நட்பு''**

ஒரு காலத்தில் தமது துன்பத்தைப் போக்கியவரின் நட்பை ஏழு பிறப்பிலும் ஆன்றோர் நினைத்துக் கொண்டே இருப்பர்.

**உயர்வு நவிற்சி அணி**

இயல்பான ஒன்றை மிகவும் சிறப்பித்து அழகுபடக் கூறுவது உயர்வு நவிற்சி அணியாகும்.

**(எ.கா):** **''அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்''**

தம் குழந்தை தனது சிறிய கைகளால் பிசைந்த உணவானது அமிழ்தை விட இனியது என்பது உயர்வு நவிற்சி அணி ஆகும்.

**உவமையணி**

ஒரு பாடலில் உவமையும் உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அஃது உவமை அணி ஆகும்.

போல, புரைய, அன்ன, இன்ன, அற்று, இற்று, மான, கடுப்ப, ஒப்ப, ஊறழ போன்றவை உவம உருபுகளாக அமையும்.

**(எ.கா):** **''பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்**
**வரிசை வரிசையா நந்தும்''**

பெரியவர்களின் நட்பு பிறைநிலவு போல வளரும் என்பது கருத்து.

**(எ.கா)** **ஊர்க் குறுமாக்கள் வெண்கோடு கழாஅலின்**
**நீர்த்துறை படியும் பெருங்களிறு போல**
**இனியை பெரும எமக்கே மற்றதன்**
**துன்னரும் கடாஅம் போல**
**இன்னாய் பெரும! நின் ஒன்றை தோர்க்கே**
**– ஔவையார். (புறநானூறு – 94–ஆவது பாடல்)**

**பொருள்:** குளத்தில் ஊர்ச் சிறு பிள்ளைகள் யானைமீது நீரை இறைத்தும் வெண்கொம்புகளைத் தழுவியும் விளையாடுவர். அந்த யானைக்கு மதம் பிடித்துவிட்டால் யாரும் பக்கத்தில் அணுக முடியாது. அதியமானும் அப்படிப்பட்டவன்தான் பரிசிலர்க்கு இனியவன். பகைவர்க்கு இன்னாதவர். இப்பாடலில் உவமை அணி பயின்று வந்துள்ளது.

**எடுத்துக்காட்டு உவமையணி :**

உவமை தனிவாக்கியமாகவும் உவமேயம் தனிவாக்கியமாகவும் இருந்து, உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.

**(எ.கா):** **''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு''**

தொட்டனைத் தூறும் மணற்கேணி – உவமை
கற்றனைத் தூறும் அறிவு – உவமேயம்

இவ்விரண்டிற்கும் இடையில் 'போல' என்னும் உவம உருபு மறைந்து வந்து பொருள் தருகிறது.

**இல்பொருள் உவமையணி :**

உலகில் இல்லாத பொருளை இருப்பது போல உவமையாக்கிக் கூறுவது 'இல்பொருள் உவமை அணி' ஆகும்.

**(எ.கா)** ''வானத் தாமரை போல்''

விண்ணில் மலர்ந்த தாமரை போல் என்பது இதன் பொருள். விண்ணில் தாமரை முளைப்பதில்லை. இது இல்பொருள் உவமையணி ஆகும்.

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று.** **– திருக்குறள்.**

மேற்கண்ட குறளில் அன்பில்லாதவனின் வாழ்க்கை பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்விட்டு வளர்வது போன்று என உலகத்தில் இல்லாத பொருளை உவமையாகக் கூறியமையால் இது இல்பொருள் உவமையணி ஆகும்.

**உருவக அணி :**

உவமைக்கும் உவமேயத்திற்கும் வேறுபாடின்றி, உவமையே பொருளாக வந்தால் அது உருவக அணி ஆகும்.

**(எ.கா)** துன்பக் கடல், இன்ப வெள்ளம்

துன்பத்தை துன்பம் என்று கூறாமல் அதைக் கடல் என உருவகம் செய்து துன்பக்கடல் என்று கூறுவது உருவக அணி ஆகும்.

இதில் உவமேயப் பொருள் முன்னும் உவமைப் பொருள் பின்னும் அமையும்.

துன்பம் – உவமேயம் ; கடல் – உவமை.

**(எ.கா)** **இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக**
**வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி**
**அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்**
**பைங்கூழ் சிறுகாலைச் செய்**

இப்பாடலில் இன்சொல் – நிலமாகவும், வன்சொல் – களையாகவும், வாய்மை – எருவாகவும், அன்பு – நீராகவும், அறம் – கதிராகவும் உருவகப் படுத்தப்பட்டுள்ளன.

**வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடர் ஆழி நீங்குகவே என்று**

இப்பாடலில் பூமி அகல் விளக்காகவும், கடல் நெய்யாகவும், கதிரவன் சுடராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன

**ஏகதேச உருவக அணி :**

செய்யுளில் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு, அதற்குத் தொடர்புடைய மற்றப் பொருட்களை அதற்கேற்ப உருவகம் செய்யாமல் விட்டு விடுவதற்கு ஏகதேச உருவக அணி என்று பெயர். 'ஏகதேசம்' என்றால் 'ஒரு பகுதி' என்று பொருள் ஆகும்.

**(எ.கா)** **பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்.**

இக்குறளில் பிறவியைக் கடலாக உருவகப்படுத்தி, அதைக் கடக்க உதவும் இறைவனடியைத் தெப்பமாக உருவகப் படுத்தாமையால், இஃது ஏகதேச உருவக அணியாகும்.

**(எ.கா)** **பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்.**

**பொருள்:** ஒருவர் தாம் அடையும் பெருமைக்கும் சிறுமைக்கும் தேர்ந்தறியும் உரைகல்லாக இருப்பது அவருடைய செயல்களே ஆகும்.

**அணிப் பொருத்தம் :** வள்ளுவர், மக்களின் செயல்களைப் பொன்னின் தரத்தை அறிய உதவும் உரைகல்லாக உருவகம் செய்துவிட்டு, மக்களது உயர்வையும் தாழ்வையும் பொன்னாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார். எனவே இஃது ஏகதேச உருவக அணி ஆகும்.

**வேற்றுமை அணி :**

ஏதேனும் ஓர் ஒற்றுமையுடைய இரு பொருள்களுக்கிடையே வேற்றுமை கற்பித்துக் கூறல் வேற்றுமை அணி ஆகும்.

**(எ.கா)** **மோப்பக் குழையும் அனிச்சம், முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.**

**ஒற்றுமை :** அனிச்ச மலர் மென்மையானது.
விருந்தினர் மென்மையான தன்மையுடையவர்.


enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



**வேற்றுமை :** அனிச்ச மலரை நுகர்ந்து பார்த்தால்தான் வாடும். ஆனால் முகம் மாறுபட்டு பார்த்தாலே விருந்தினர் வாடிவிடுவர்.

(எ.கா) : **தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.**

**அணிப் பொருத்தம் :** நெருப்பு, கொடுஞ்சொல் ஆகிய இரண்டும் சுடும் தன்மை கொண்டவை என்று முதலில் ஒற்றுமை கூறப்பட்டது. நெருப்பினால் சுட்ட காயம் கூட ஆறிவிடும். கொடுஞ்சொல்லினால் உள்ளத்தில் ஏற்பட்ட வடு ஆறாது என்ற வேற்றுமை பின்னர் கூறப்பட்டது.

## பிறிதுமொழிதல் அணி :

புலவன் தான் கருதிய பொருளை அப்படியே கூறாமல் மறைத்து, அதை விளக்குவதற்கு அதைப் போன்ற பிறிதொன்றினைக் கூறி விளக்குவதற்குப் பிறிதுமொழிதல் அணி அல்லது ஒட்டணி என்று பெயர். உவமையை மட்டும் கூறி அதன்மூலம் தான் கூறவந்த கருத்தைக் கூறுவது ஆகும்.

(எ.கா) : **பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.**

மென்மையாக இருக்கும் மயிலிறகையும் அளவாக வண்டியில் ஏற்ற வேண்டும். விஞ்சினால் வண்டியின் அச்சு முறியும். – இது கூறப்பட்ட கருத்து.

எந்தச் செயலையும் அளவாகச் செய்ய வேண்டும்; அளவுக்கு மீறினால் அழிவு நேரிடும். – இது விளக்க வந்த கருத்து

(எ.கா) : **கடலோடா கால்வன் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.**

**பொருள் :** நிலத்தில் ஓடும் தேர் கடலிலும் கடலில் ஓடும் நாவாய் நிலத்திலும் ஓடாது.

**அணிப் பொருத்தம் :** இக்குறளில் உவமை மட்டுமே அமைந்துள்ளது. கடலில் ஓடும் நாவாய், நிலத்தில் ஓடும் தேர் ஆகியவை தங்கள் இடத்தை விட்டு, வேறோர் இடத்தில் ஓடாது. இதன் மூலம் ஒவ்வொருவரும் தமக்குப் பொருத்தமான செயலில்தான் வெற்றி பெற முடியும். தமக்குப் பொருத்தமில்லாத செயல்களில் ஈடுபட்டால், வெற்றி பெற இயலாது என்ற கருத்தை நாமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

## நிரல்நிறை அணி :

சொற்களையும் பொருளையும் வரிசைப்படுத்தி அந்த வரிசைப்படி பொருள் கொள்ள வைத்தலே நிரல்நிறை அணி ஆகும்.

(எ.கா) : **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.**

அன்பு அறன் இரண்டையும் முறையாக நிறுத்தி அன்பே பண்பு எனவும், அறனே பயன் எனவும் வரிசைப்படி கூறுதலின் நிரல்நிரை அணியாகும்.

## வேற்றுப்பொருள் வைப்பணி :

ஒரு சிறப்புப் பொருளை உலகம் அறிந்த பொதுப் பொருளின் துணை கொண்டு விளக்குவதற்கு வேற்றுப்பொருள் வைப்பணி என்று பெயர்.

(எ.கா) : **சிறந்த ஒளிவளர்க்குந் தேரோன் - மறைந்தான்
இறவாது வாழ்கின்றார் யார்?**

சிறந்த ஒளியைக் கொடுத்துக் கொண்டிருந்த கதிரவனே மறைந்துவிட்டான்; இவ்வுலகில் இறவாமல் யார் வாழ்கின்றார் என்பது இதன் பொருள்.

இறவாது வாழ்கின்றவர் யார் – சிறப்புப் பொருள்

சிறந்த ஒளியை வளர்க்கும் தேரோன் மறைந்தான் – பொதுப் பொருள்

**உரைமுடிவு காணான் இளையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.**

இப்பாடலில் கரிகாலன் இளமையில் நரைமுடித்து வந்து, வழக்கில் நீதி வழங்கியமை என்பது சிறப்புச் செய்தி. வழிவழியாக நீதி தவறாமல் ஆட்சி புரிந்து வரும் சோழர் குலத்தில் தோன்றியமையால், இயல்பாகவே நீதி வழங்கினான் என்பது பொதுப் பொருள். சிறப்புப் பொருளால் பொதுப் பொருள் விளக்கப்பட்டுள்ளதால் இப்பாடலில் வேற்றுப்பொருள் வைப்பணி அமைந்துள்ளது.

## தற்குறிப்பேற்ற அணி :

இயற்கையாக நிகழும் நிகழ்ச்சியின் மேல் புலவன் தன்னுடைய குறிப்பை ஏற்றிச் சுவைபடக் கற்பனையாகக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

(எ.கா): **"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல்என் பனபோல் மறித்துக் கைகாட்ட"**

**– சிலப்பதிகாரம்**

பாண்டிய மன்னனின் அரண்மனை மீது கட்டப் பெற்றுள்ள மீன்கொடி காற்றில் இயற்கையாக அசைந்து பறந்து கொண்டிருக்கின்றது. இயற்கையாக நிகழும் இக்கொடியின் அசைவு மதுரை நகருள் நுழையவிருக்கும் கோவலனையும் கண்ணகியையும் பார்த்து "நீவிர் இங்கு வராதீர்" என்று கையசைத்துக் கூறுவதைப் போன்றிருந்தது எனப் புலவர் தன்னுடைய கருத்தை ஏற்றிக் கூறுகின்றார்.

## வஞ்சப் புகழ்ச்சி அணி :

ஒன்றினைப் புகழ்வதைப் போல புகழ்ந்து பழிப்பதும், பழிப்பதைப் போல பழித்துப் புகழ்வதும் வஞ்சப் புகழ்ச்சி அணியாகும்.

(எ.கா): 1. **"தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்"**

இச்செய்யுளில் கயவரைத் தேவருக்கு ஒப்பாகக் கூறி புகழ்வது போல் பழிக்கப்பட்டுள்ளதால் இது வஞ்சப்புகழ்ச்சி அணியாகும்.

(எ.கா): 2. **"பாரி பாரி என்று பல ஏத்தி,
ஒருவர் புகழ்வர், செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்.
மாரியு உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே"**

**பொருள்:** புலவர் பலரும் பாரி ஒருவனையே புகழ்கின்றனர். பாரி ஒருவன் மட்டுமா கைம்மாறு கருதாமல் கொடுக்கிறான்? மாரியும்தான் கைம்மாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகத்தைக் காக்கிறது. பாரியை இகழ்வது போல புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. எனவே, இது வஞ்சப்புகழ்ச்சியணியாகும்.

## இரட்டுறமொழிதல் அணி :

ஒரு சொல் அல்லது சொற்றொடர் இருபொருள் படுமாறு கூறுவது இரட்டுறமொழிதல் அணி அல்லது சிலேடை அணி எனப்படும்.

(எ.கா): **ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே.**

இச்செய்யுளில் காவலர் என்னும் சொல் கா + வலர் எனப் பிரிந்து 'காத்தலில் வல்ல அரசர்' என்று பொருள் தரும்.

கா + அலர் எனப் பிரிந்து நின்று 'சோலையிலுள்ள மலர்' என்று பொருள் தரும்.

இவ்வாறு இருபொருளில் வருவதால் இது இரட்டுறமொழிதல் அணியாகும்.

(எ.கா): **ஓடும் இருக்கும் அதனுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது - சேடியே
தீங்காயது இல்லா திருமலைரா யன் வரையில்
தேங்காயும் நாயும் நேர் செப்பு.**

இப்பாடல் தேங்காய், நாய் இரண்டுக்கும் பொருந்துவதாய் அமைந்துள்ளது.

**பொருள்:** தேங்காயில் ஓடு இருக்கும் ; தேங்காயின் உட்பகுதி வெண்மை நிறத்தில் இருக்கும் ; அது கோணல் இல்லாமல் குலையாகத் தொங்கும்.



enquiry@surabooks.com Ph: 9840455556

- இறையனார் தருமிக்காக (திருவிளையாடற்புராணம்) எழுதிய 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் பாடல் குறுந்தொகையில் அமைந்துள்ளது.

## 3. ஐங்குறுநூறு

**பெயர்க்காரணம்:**

- ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, முல்லை என ஐவகைத் திணை குறித்த குறுகிய நூறு நூறு பாட்டுகளாகத் தொகுக்கப்பட்ட நூல் இது.
- ஆதலின் இந்நூல் ஐங்குறுநூறு எனப் பெயர் பெற்றது.
- இந்நூலில் மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பேரெல்லையும் உடைய ஐந்நூறு ஆசிரியப்பாக்கள் உள்ளன.
- அதனால் அளவாலும் பொருளாலும் இந்நூல் இப்பெயர் பெற்றது.

**நூல் தோன்றிய வரலாறு:**

- இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்.
- தொகுப்பித்தவர் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.
- யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன், இன்பப் பொருள் அமைந்த அகப்பொருள் பாடல்கள் திணைக்கு நூறாய் ஐந்நூறு பாடல்களைக் கொண்ட நூல் ஒன்றை உருவாக்கித் தமிழ் உலகிற்கு அளிக்க விரும்பினான்; தன் விருப்பத்தைக் கூடலூர்க் கிழார் என்னும் புலவரிடம் கூறினான்.
- அவர் அவ்வத்திணை பாடுதலில் வல்ல புலவர்களைக் கொண்டு நூறு நூறு பாடல்கள் பாடச்செய்து இந்நூலைத் தொகுத்தளித்தார்.

**நூலாசிரியர்கள்:**

- அம்முறையில் இந்நூற்பாடல்கள் ஐம்பெரும் புலவர்களால் பாடப்பட்டனவாம்.
- "மருதத்திணை பாடியவர் **ஓரம்போகியார்**" "நெய்தல் திணை பாடியவர் **அம்மூவனார்**" "குறிஞ்சித்திணை பாடியவர் **கபிலர்**". "பாலைத்திணை பாடியவர் **ஓதலாந்தையார்**". முல்லைத்திணை பாடியவர் **பேயனார்**" என்பவராவர்.
- இந்நூலிற்கு கடவுள்வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இதனையும் வரிசை முறையையும்

**"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்**
**கருதுங் குறிஞ்சிக் கபிலன் - கருதிய**
**பாலைஓத லாந்தை பனிமுல்லை பேயனே**
**நூலையோ தைங்குறு நூறு."** எனும் வெண்பாவால் அறியலாம்.

**நூலின் பெருமை :**

- இந்நூலில் ஒவ்வொரு திணையும் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்ட பத்துப் பத்துகளாக நூறு பாடல்கள் அமைந்துள்ளன.
- பல அடிகளைக் கொண்ட பாடல்களில் சொல்லழகும், பொருளழகும் அணிநலமும் அமையப் பாடுவது எளிது. குறுகிய அடிகளில் அந்நலங்கள் எல்லாம் அமையப் பாடுவது அரிது. அவ்வகையில் வள்ளுவர் இரண்டடிப் பாடல்களில் மிக விரிந்த கருத்துகளைச் செறித்துப் பாடியதனாலேயே திருக்குறள் அறநூல்களுள் தலைசிறந்ததாய்ப் போற்றப்படுகிறது.
- அதுபோல, அகப்பொருள் கூறும் குறுகிய இன்பியல் பாடல்களைக் கொண்டதாய்ச் சொல்லழகும் பொருளழகும் அணிநலமும் செறிந்ததாய்ப் பண்டைத் தமிழருடைய வாழ்க்கை முறைகளைத் தன்னுள் கொண்டு காட்டும் கண்ணாடியாய் விளங்கும் பெருமை உடையது ஐங்குறுநூறு.
- இப்பாடல்களின் வாயிலாகப் பண்டைத் தமிழரின் காதல் வாழ்க்கை, ஒழுக்கம், நாகரிகம், பழக்கவழக்கங்கள், மகளிரின் மாண்பு, அறவுணர்வு ஆகியவற்றை நன்கு உணர முடிகின்றது.
- இப்பாடல்களில் அமைந்த உள்ளுறை உவமம், இறைச்சி போன்றவை நுண்ணிதின் ஆராய்ந்து சுவைத்து இன்புறத்தக்கன.
- "நவில்தொறும் நூல்நயம் போலும்" என்னும் கூற்றுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குவது இந்நூல்.
- இந்நூலை 1903–இல் உ.வே. சாமிநாத ஐயர் முதன் முதலாகப் பதிப்பித்தார்.
- இந்நூலுக்கு முதன்முதலில் எழுதியவர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. இந்நூலில் 129 மற்றும் 130–ஆம் பாடல்கள் கிடைத்தில.
- தாய்முகம் நோக்கியே ஆமைக்குட்டிகள் வளரும் என்ற உண்மையும், முதலைகள் தம் குட்டிகளைக் கொன்று தின்றுவிடும் என்ற செய்தியும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.
- அம்மூவனார் இயற்றிய நெய்தல் திணைப் பாடல்களில் உள்ள தொண்டிப்பத்து 'அந்தாதி' முறையில் அமைந்துள்ளது.
- உள்ளுறையும் இறைச்சியும் மிகுதியாக இடம்பெற்றுள்ள சங்க இலக்கியம் இந்நூலேயாகும்.
- தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள 'அம்மை' என்ற வனப்பு இதில் விரவி வந்துள்ளது. இந்நூலின் பாவகை ஆசிரியப்பா. இந்திரவிழா குறித்து கூறப்பட்ட சங்கத்தொகை நூல் இதுவே ஆகும். ஓரம்போகியாரின் பெயர் சில இடங்களில் ஒன்னார் உழவர், காம்போதியார் என்று குறிப்பிடப்படுள்ளது. இப்புலவரை ஆதரித்தவர் 'ஆதன் அவினி' என்னும் சேர மன்னன் ஆவார்.
- இந்நூலில் நெய்தல் திணைப் பாடல்களைப் பாடிய அம்மூவனாரின் இயற்பெயர் 'மூவன்' ஆகும். பின்னர் அடைமொழி சேர்க்கப்பட்டு அம்மூவனார் என மாறியிருக்கக்கூடும். இவரை சேரமன்னன், பாண்டிய மன்னன், குறுநில மன்னனான காரி ஆகியோர் ஆதரித்துள்ளனர். குறிஞ்சித்திணைப் பாடல்களைப் பாடிய கபிலர் மதுரை அருகேயுள்ள வாதவூரைச் சேர்ந்தவர். பாரி என்ற குறுநில மன்னனின் நண்பனாக விளங்கியவர். பாரி இறந்தபின் அவரது மகள்களுக்கு திருமணம் செய்து வைத்தார். 'குறிஞ்சிக்கோர் கபிலர்' என்று சிறப்பிக்கப்பட்டார்.

## 4. பதிற்றுப்பத்து

- இது சேர மன்னர் பதின்மர் பற்றிய நூல், பத்துப் புலவர்கள் பாடப்பட்ட நூலாகும். ஒரு மன்னருக்குப் பத்துப் பாடல்கள் என்ற முறையில் நூறு பாடல்கள் கொண்டது.
- முதற் பத்தும் இறுதிப் பத்தும் மறைந்தன. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஒரு பதிகம் உள்ளது. அதில் பாடியவர் பெயர், செய்யுட்களின் பெயர், புலவர்கள் பெற்ற பரிசில், அவ்வரசரின் ஆட்சிக்கால அளவு முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.
- இப்பதிகம் பிற்கால மெய்க்கீர்த்தியின் அமைப்பினை உடையது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் அப்பாட்டின் துறை, வண்ணம், தூக்கு, பெயர் ஆகியன தரப்பட்டுள்ளன.
- இரண்டாம் பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது.
- மூன்றாம் பத்து, பல்யானைச் செல்கெழு குட்டுவனைக் குறித்துப் பாலைக் கௌதமனார் படைத்தது.
- நான்காம் பத்து, களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பற்றிக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது.
- ஐந்தாம் பத்து, கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் மீது பரணர் பாடியது.
- ஆறாம் பத்து, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பற்றி காக்கைப் பாடினியார் இசைத்தது.
- ஏழாம் பத்து செல்வக்கடுங்கோ வாழியாதனைக் குறித்துக் கபிலர் பாடியது.
- எட்டாம் பத்து, தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, மீது அரிசில் கிழார் யாத்தது.
- ஒன்பதாம் பத்து, இளஞ்சேரல் இரும்பொறையைப் பற்றிப் பெருங்குன்றூர் கிழார் இயற்றியது.

www.surabooks.com



- இது சேர மன்னர்களின் வெற்றிச் சிறப்பு, நாடு காத்தற் சிறப்பு, கொடைச் சிறப்பு முதலியவற்றைத் தெரிவிக்கிறது.

**கடவுள் நிலைய கல்ஓங்கு நெடுவரை**
**வடதிசை எல்லை இமயம் ஆகத்**
**தென் அம் குமரியொடு ஆயிடை அரசர்**
**முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பு எழச்**
**சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த**
**போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ !**

என கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் வெற்றிச் சிறப்பினைக் குறிக்கிறது இந்நூல்.

இந்நூலை 1904–இல் முதன்முதலாகப் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாத ஐயர் ஆவார்.

- பாடாண் திணையில் ஆசிரியப்பா வகையில் இந்நூல் பாடப்பட்டுள்ளது. வழக்கில் இல்லாத பழஞ்சொற்களை மிகுதியாகப் பெற்றுள்ளதால் இந்நூல் 'இரும்புக்கடலை' என்று அழைக்கப்படுகிறது. இந்நூலில் நான்காம் பத்து 'அந்தாதி' தொடைவகையில் அமைந்துள்ளது.
- ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் இந்நூலைத் தொகுத்தவர் 'பதிகம்' என்ற பகுதியைச் சேர்த்துள்ளார். அவற்றில் தான் அறிந்த செய்திகளையும் தொகுத்தளித்துள்ளார்.
- முதல்பத்து உதியஞ்சேரலாதன் பற்றியது. ஆனால் அது கிடைக்கவில்லை.
- இறுதிப்பத்து யானைகட்சேய் மாந்தரால் சேரல் இரும்பொறை பற்றியது. ஆனால் அதுவும் கிடைக்கவில்லை.

**பதிகம் கூறியுள்ள செய்திகள் :**

- **இரண்டாம்பத்து :** இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆரியரை அடக்கி, இமயத்தில் வில்கொடியைப் பொறித்தான். யவனர்களை அடக்கி அரண்மனைக் காவலாளிகளாக வேலைக்கு அமர்த்தினான். போரில் வென்ற பகைநாட்டுச் செல்வங்களை தன்நாட்டு மக்களுக்கு வழங்கினான்.
- **மூன்றாம் பத்து :** பல்யானைச் செல்கெழு குட்டுவன் உம்பற்காட்டைக் கைப்பற்றினான். முதியர் குடிமக்களைத் தோழைமையாக்கிக் கொண்டான். அயிரை தெய்வத்திற்கு விழா எடுத்தான். இறுதியில் துறவு வாழ்க்கையை மேற்கொண்டான்.
- **நான்காம் பத்து :** களங்காய்ங்கண்ணி நார்முடிச்சேரல் பூழி நாட்டை வென்றான்.
- **ஐந்தாம் பத்து :** கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் ஆரியரை அடக்கி, கனக விஜயர் தலைமீது இமயத்திலிருந்து கற்களை சுமக்க வைத்து, அக்கற்களால் கண்ணகிக்கு சிலை செய்து கோயில் கட்டினான்.
- **ஆறாம்பத்து :** ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். போரில் வென்று வந்து தான் கைப்பற்றிய வருடை ஆடுகளை தன்நாட்டு மக்களுக்கு வழங்கினான். 'வானவரம்பன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றான்.
- **ஏழாம் பத்து :** செல்வங் கடுங்கோ வாழியாதன் பலபோர்களில் வெற்றி பெற்றன். தனது நண்பன் கல்விச் செலவுக்காக ஓர் ஊரையே நல்கினான்.
- **எட்டாம் பத்து :** பெருஞ்சேரல் இரும்பொறை கொல் கூற்றத்துப் போரில் அதியமானையும், இரு பெரு வேந்தர்களையும் வென்றான்.
- **ஒன்பதாம் பத்து :** இளஞ்சேரல் இரும்பொறை கோப்பெருஞ்சோழன், இளம் பழையன் மாறன் ஆகிய இருபெரும் வேந்தர்களை வீழ்த்தினான்.

**வஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சேரமன்னர்கள்**

- **இமயவரம்பன் :** இமயவரம்பனின் தம்பி பல்யானை செல்கெழு குட்டுவன்
- இமயவரம்பனுக்கும் சோழ இளவரசி நற்சோணைக்கும் பிறந்த மூத்த மகன் கடல் பிறகோட்டிய செங்குட்டுவன்.
- இமயவரம்பனுக்கும் வேள்ஆவிக்கோமான் பதுமன் மகளுக்கும் பிறந்த இளையமகன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.

**கருவூர் மாநகரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சேரமன்னர்கள்**

- செல்வக்கடுங்கோ ஆழி ஆதன்
- தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
- குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை

## 5. பரிபாடல்

- திணை – அகமும் புறமும், பாவகை – பரிபாட்டு
- பாடல்கள் – 70 (கிடைத்தவை 22)
- பாடிய புலவர்கள் 13 பேர்.
- அடிவரையறை – 25 - 400

**பெயர்க்காரணம்:**

- வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களும் பல வகையான அடிகளுக்கும் பரிந்து இடம் கொடுக்கும் தன்மையால் பரிபாட்டு ஆனது.
- **வேறு பெயர்கள்:** பரிபாட்டு, ஓங்கு பரிபாடல், இசைப்பாட்டு, பொருட்கலவை நூல், தமிழின் முதல் இசைப்பாடல் நூல்.
- தொல்காப்பிய விதிப்படி அமைந்த தொகை நூலாகும். தெய்வங்கள் அடிப்படையில் பகுப்பு முறை அமைந்த ஒரே தொகுப்பு நூலாகும்.
- பாண்டிய நாட்டை பற்றி மட்டுமே கூறுகிறது. பாண்டிய நாட்டை மட்டும் கூறும் தொகை நூல்கள் பரிபாடல், கலித்தொகை. 'கின்று' என்னும் காலம் காட்டும் முதன் இடைநிலை முதலில் பரிபாடலில்தான் அமைந்துள்ளது. உலகத் தோற்றம் குறித்தும் இந்நூல் கூறுகிறது.
- பரிபாடலில் அமைந்துள்ள எண்ணுப் பெயர்களாவன, 0 – பாழ்; 1/2 – பாகு; 9 – தொண்டு.

**திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்**
**தொருபாட்டுக் காடுகாட்கு ஒன்று - மருவினிய**
**வையையிரு பத்தாறு மாமதுரைநான் கென்ப**
**செய்யபரி பாடல் திறம்.**

**பகுப்புமுறை**

| தெய்வம் | பாடல் எண்ணிக்கை | கிடைத்தவை |
|---|---|---|
| திருமால் | 8 | 6 |
| செவ்வேள் (முருகன்) | 31 | 8 |
| காடுகாள் (காளி) | 1 | 0 |
| வையை | 26 | 8 |
| மதுரை | 4 | 0 |
| **மொத்தம்** | 70 | 22 |

- இந்நூலை 1918–இல் முதன்முதலாகப் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாத ஐயர் ஆவார்.

**'விருத்தப்பா வளர்ந்த பிறகு கலிப்பாவும் பரிபாட்டும் போற்றப்படாமல் போயிற்று' - மு. வ. கூற்று**

- இந்நூலில் 70 பாடல்கள் இருந்ததை இறையனார் களவியல் உரை குறிப்பிடுகிறது. இதிலுள்ள ஒவ்வொரு பாடலில் இறுதியிலும் பாடுபொருள், பாடியவர், பண்வகை போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன.

## 6. கலித்தொகை

**நாடகவழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**
**உரியதாகும் என்மனார் புலவர்** (தொல்காப்பியம் அகத்திணையியல்)



enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



.............
**நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்;**
**உணவெனப் படுவது நிலத்தோடு நீரே;**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;**
........................ **புறம்.18**

உணவு கொடுத்தவரே உயிர்கொடுத்தவர். இந்த உடலானது, உணவினாலானது. உணவு என்பது யாது? நிலத்தொடு நீர் சேர்வதுதான். அப்படி இணைத்து வேளாண்மைக்கு உதவுக. அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் நிலைநிறுத்தி வாழ்வித்தவராவர் என்று நீரின்றி அமையாத உடல்குறித்துக் கூறி, நீர்வளம் பெருக்க, பாண்டிய மன்னனை அறிவுறுத்துகிறார்.

## அறநிலைக் கவிதைகள்

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வாழ்வியல் அறங்களைக் கற்பிப்பவை. இவை வெண்பா என்னும் யாப்பு வகைமையில் அமைந்தவை. உலகளாளாவிய அறிஞர்களாகளால் ஒப்பற்ற நூலென ஏற்றுக்கொள்ளப்பட்ட திருக்குறள், கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

## காப்பியக் கவிதைகள்

மன்னர்களைப் பாடிய காலம் மாறிக் குடிமக்களைக் கவிதையின் பொருளாய்க் கொண்டெழுந்தவை தமிழ்க்காப்பியங்கள். காப்பியக்கவிதைகள் காதல், வீரம், அறம் என அனைத்தையும் பாடிச்செல்கின்றன. உரையொடு கலந்த கவிதைகளை அறிமுகம் செய்தவை இவை. பிறப்பின் வேற்றுமையொழிப்பு, பசியின்றி வாழ்தல், வாழ்வின் நிலையாமை எனக் காப்பியக்கவிதைகளின் தளம் பரந்துபட்டது. மாந்தருக்கு அறமே நிலையானது என்பதைக் குறிக்கும் மணிமேகலைக்காப்பியத்தில் அமைந்த கவிதை.

**இளமையும் நில்லா யாக்கையும் நில்லா**
**வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா**
**புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்**
**மிக்க அறமே விழுத்துணை ஆவது**
**– மணிமேகலை, சிறைசெய்காதை 135–138**

## பக்திக் கவிதைகள்

காப்பியக் கவிதைகளுக்குப் பின் இயற்றப்பட்ட தமிழ்க்கவிதைகளின் பாடுபொருள், கடவுளை நோக்கியதாக அமைந்திருந்தது. இறையுணர்வோடு அன்பையும் அறத்தையும் இக்காலக்கவிதைகள் வெளிப்படுத்தின. இறைவன்மீது காதல் கொண்டு எழுதப்பட்ட இக்கவிதைகள் இன்றும் மாறாத்தன்மையோடு பக்தி மணம் வீசிக்கொண்டிருக்கின்றன.

## சிற்றிலக்கியக் கவிதைகள்

பக்திவழியே பயணித்துக்கொண்டிருந்த தமிழ்க்கவிதைகள் பின்னர், சிற்றிலக்கியங்கள் என்னும் புதியவடிவில் எழுதப்பட்டன. சிற்றிலக்கியத்தின் வடிவங்களான, கோவை, உலா, அந்தாதி போன்றவை கடவுள், அரசன், சிற்றரசர்கள், வள்ளல்களைப் புகழ்ந்தன. எனினும் பள்ளு, குறவஞ்சி போன்றவை எளிய மக்களின் வாழ்வியலையும் எடுத்தியம்பின.

## தனிப்பாடற் கவிதைகள்

புலவர் பெருமக்கள் தம் கவிப்புலமையைக் காட்ட நல்லதொரு களமாகத் தனிப்பாடல்கள் பயன்பட்டன. சிலேடை, விடுகதை, சொற்புதிர் போன்ற சிந்தைக்கு விருந்தாகும் வகையில் புலவர் பெருமக்கள் பாடிச்சென்ற பாடல்கள் தனிப்பாடற் திரட்டுகளாக நமக்குக் கிடைத்துள்ளன.

## தமிழ்க் கவிதையின் மரபு வடிவம்

தமிழ் யாப்பிலக்கணத்தின்படி எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய கூறுகளுடன் அமைந்த பாவினங்களை மரபுப்பாடல் என்கிறோம். சங்க காலம் தொடங்கி இன்றைய நவீனகாலம் வரையிலும் மரபுக்கவிதைகள் தொடர்ந்து எழுதப்பட்டு வருகின்றன. வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா முதலிய மரபார்ந்த பா வடிவங்களிலும் கண்ணி, சிந்து, தெம்மாங்கு, கும்மி போன்ற வடிவங்களிலும் மரபுக் கவிதைகள் அமைகின்றன. இன்றளவும் தமிழில் மரபு மாறாத கவிதைகள் எழுதப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய வடிவ முன்னெடுப்புகள்

காலத்திற்குக் காலம் செய்யுள் வடிவில் மாற்றங்கள் நேரலாம்; தமிழ்மொழி வளர்ச்சிக்கு இத்தகைய மாற்றங்கள் பயன்படுமானால் அவற்றை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று கருதியே தொல்காப்பியர்,

**விருந்தே தானும் புதுவது புனைந்த**
**யாப்பின் மேற்றே** **(தொல் – செய். 231)**

என்று, 'விருந்து' என்பதைப் 'புதுமை' என்னும் பொருளில் கூறியுள்ளார். தற்காலத்தின் சிறுகதை, நாவல், புதுக்கவிதை முதலியவற்றை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலகளவில் தோன்றிய இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகக் கவிதையின் வடிவத்திலும் பாடுபொருளிலும் மாற்றம் ஏற்பட்டது. தனிமனித வாழ்வியல், சமூக வாழ்வியல் போன்றவை நவீனக்கவிதைகளின் பாடுபொருள்களாயின. புதுக்கவிதை, ஹைக்கூ, லிமெரிக், லிமெரைக்கூ, சென்ரியூ, குக்கூ என நவீன வடிவங்களிலும் தமிழ்க்கவிதைகள் பயணிக்கத் தொடங்கின.

## புதுக்கவிதை

தொன்று தொட்டு வரும் மரபு வடிவத்தில், இன்றும் தமிழ்க் கவிதைகள் எழுதப்பட்டு வருகின்றன; எனினும் யாப்பிலக்கண வரையறைக்கு உட்படாமல் சுதந்திரமான வெளிப்பாட்டோடும் கட்டற்ற தன்மையோடும் இன்றைய புதுக்கவிதை எழுதப்படுகிறது. இஃது உவமை, உருவகம், படிமம், குறியீடு, அங்கதம், சிலேடை, முரண், இருண்மை முதலான பல்வேறு உத்திகளைத் தன்னகத்தே கொண்டு, கவிஞனின் விரிசிந்தனைக்கேற்ப புதுப்புது வடிவமெடுக்கிறது. யாப்பிலக்கணம் அறிந்தோருக்கு மட்டுமே என்றிருந்த கவிதையின் தன்மையை மாற்றி, பொதுவாசகர்களும் கவிதையைப் படிக்கவும் படைக்கவும் புதுக்கவிதை வாய்ப்பளிக்கிறது.

**சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது**
**சொற்புதிது சோதிமிக்க நவகவிதை.**

என்று பாரதியார் பாடுவதைப் புதுக்கவிதைக்குரிய விளக்கமாகக் கொள்ளலாம். புதுக்கவிதையில் கவிஞன் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றித் தன் மனத்தில் தோன்றியதை, அதே உணர்வுடன் வெளிப்படுத்த முடிகிறது. இதில் சமூக அவலங்கள், சமகால நிகழ்வுகள், எதிர்பார்ப்புகள், இலக்குகள் என அனைத்தும் பாடுபொருள்களாகின்றன.

## பாரதி தந்த புதுமை

பாரதியார்தான் முதன்முதலில் தமிழ்க்கவிதைகளில் புதிய முயற்சிகளை மேற்கொண்டார். அவரின் கவிதை வடிவம் தமிழின் மரபான செய்யுள் வடிவமும் நாட்டார் பாடல்களின் ஓசை வடிவமும் கலந்தது. என்றாலும் உலகளவில் தோன்றிய நவீன கவிதைப் போக்கினை உள்வாங்கிக்கொண்ட அவர் உள்ளடக்கம், வடிவம் இரண்டிலும் மரபுக்கும் புதுக்கவிதைக்கும் பாலமாகத் திகழ்ந்தார். தம் காலத்தில் மட்டுமல்லாது இன்றும் அவர் தமிழ்க்கவிதையின் வலிமையான குரலாக ஒலிக்கின்றார். இவர் 'காட்சி' என்ற தலைப்பில் எழுதிய கவிதை, தமிழில் புதுமையான வடிவத்தில் அமைந்த முதல் வசன கவிதையாகும்.



enquiry@surabooks.com Ph: 9840455556

காட்சி

**தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது,**
**ஞாயிறு நன்று, திங்களும் நன்று.**
**வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.**
**மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது.**
**கடல் இனிது, மலை இனிது, காடு நன்று.**

இவ்வாறு பாரதியின் முயற்சியால் தமிழில் கட்டற்ற கவிதை வடிவம் பிறந்தது.

## பாரதியின் காலம்

பாரதி வாழ்ந்த காலம் இந்திய வரலாற்றில் திருப்பங்கள் நிறைந்தது. மக்கள், அந்நியர் ஆட்சிக்கு எதிராக விடுதலை வேட்கையோடு போராடிய காலம். பாரதி அச்சூழலில் மொழியை மக்களுக்கான குரலாகப் பயன்படுத்தத் துணிந்தவர். இதனால், பாரதியின் கவிதைகள் விடுதலைக்கான குரலாக ஓங்கி ஒலித்தன. இவர்தம் கவிதைகளில் தேசவிடுதலை, பெண்விடுதலை, சமுதாயவிடுதலை இம்மூன்றும் பாடுபொருள்களாயின. அவர் கவிதையைச் சமூக மாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்தினார். நாட்டுப்புறச் சிந்து இசையின் அடிப்படையில் அமைந்த கவிதைகளைப் பாடியதனால் 'சிந்துக்குத் தந்தை' என அழைக்கப்பட்டார். மக்களோடு நேரடியாகப் பேசும் முறையில் கவிதைகளைப் படைத்தார். இவர் ஷெல்லியின் கவிதைகளால் கவரப்பட்டு, தமது பெயரை 'ஷெல்லிதாசன்' என மாற்றிக் கொண்டார்.

## பாரதிதாசன் காலம்

'பாரதியின் கவிதாமண்டலத்தைச் சேர்ந்தவர்' என்று பாரதியாரால் முன்மொழியப்பட்டவர் பாரதிதாசன். இவர், சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ் வளர்ச்சி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் முதலான கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், புவியை நடத்து; பொதுவில் நடத்து போன்ற பொதுவுடைமைக் கருத்துகளையும் மக்களாட்சித் தத்துவங்களையும் தமது பாடல்களில் வலியுறுத்தியவர். சந்த அமைப்புகளிலும் இசையிலும் பாரதியைப் போலவே நல்ல தேர்ச்சி பெற்றவர். மக்கள் இலக்கிய வடிவங்களான கும்மி, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு போன்ற வடிவங்களிலும் கவிதை பாடியவர். பழைய யாப்பு வடிவில் ஆசிரியப்பாவையும் ஆசிரிய விருத்தங்களையும் பாடினார். சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதை,

**ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்**
**உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி**
**ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பாநீ**

என்ற பாடபாடலின் மூலம் எடுத்துரைக்கின்றார். பாரதிதாசன் தன்மொழி, தன்னாடு, தன்மக்கள் எனப் பாடியதால் இரஷ்யக் கவிஞரான 'இரசூல் கம்சதேவ்' என்பவரோடு ஒப்பிடப்படுகிறார். பாரதிதாசனைப் பின்பற்றி எழுதிய வாணிதாசன், முடியரசன், சுரதா போன்றோர் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

## மணிக்கொடி காலம்

பாரதியைத் தொடர்ந்து தமிழில் பல்வேறு கவிஞர்கள் புதுக்கவிதை எழுத முற்பட்டனர். புதுக்கவிதை முன்னோடிகளான ந.பிச்சமூர்த்தி, கு.ப. ராசகோபாலன், க.நா. சுப்பிரமணியன், புதுமைப்பித்தன் போன்றோர் மணிக்கொடி இதழில் புதுக்கவிதைகளை எழுதினர். ந.பிச்சமூர்த்தி 'புதுக்கவிதையின் தந்தை' என அறியப்படுகிறார். இக்காலகட்டத்தில் கிராம ஊழியன், கலாமோகினி ஆகிய இதழ்களும் வசன கவிதைகளை வெளியிட்டன.

## எழுத்து காலம்

புதுக்கக்கவிதை மறுமலர்ச்சியும் வலிமையும் பெற்றதில் எழுத்து இதழின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சி.சு. செல்லப்பா தொடங்கிய 'எழுத்து' இதழ் புதுக்கவிதையின் சோதனை முயற்சிகளை வெளியிட்டது. 'பெட்டிக்கடை நாரணன்', 'விஞ்ஞானி' போன்ற கவிதைகளை ந. பிச்சமூர்த்தி எழுதினார்.

எழுத்து இதழ் புதிய கவிஞர்களின் கவிதைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. புதுகவிதை குறித்த பல திறனாய்வுக் கட்டுரைகளும் அதில் வெளியாகின. மயன், சிட்டி, வல்லிக்கண்ணன், வேணுகோபாலன், டி.கே.துரைஸ்வாமி (நகுலன்), தருமு. சிவராமு (பிரமிள்), சி.மணி, சுந்தரராமசாமி (பசுவய்யா), எஸ். வைத்தீஸ்வரன் போன்றோர் எழுத்து இதழில் எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

அக்காலத்தில் தமிழில் புதுக்கவிதைத் தொகுப்பாகப் 'புதுக்குரல்கள்' என்னும் நூல் வெளிவந்தது. இக்கக்கவிதைத் தொகுப்பு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பாரதியைப் பின்பற்றியது. 24 கவிஞர்களால் எழுதப்பட்ட 63 கவிதைகளைக் கொண்டது.

## கசடதபற காலம்

1970–இல் வெளிவந்த 'கசடதபற' என்னும் இதழ் ஞானக்கூத்தன், கலாப்பிரியா, கல்யாண்ஜி போன்ற புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தியது. இக்காலக்கட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின.

## வானம்பாடி காலம்

1971–இல் கோவையிலிருந்து 'வானம்பாடி' இதழ் வெளிவந்தது. இதில் எழுதிய கவிஞர்கள் 'மானுடம் பாடவந்த வானம்பாடிகள்' என்று தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டனர். அவர்கள் சமூக நலனில் அக்கறைக் கொண்டு தம்கவிதைகளை உருவாக்கினர். சிற்பி, மீரா, நா. காமராசன், மு. மேத்தா, புவியரசு, இன்குலாப், தமிழன்பன், கங்கைக்கொண்டான், அக்னிபுத்திரன், சக்திக்கனல், சிதம்பரநாததன் போன்றோர் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க கவிஞர்களாவர்.

இதே காலகட்டத்தில், அப்துல் ரகுமான், அபி போன்ற கவிஞர்கள் இயக்க அடையாளங்கள் இல்லாமல் தனித்துவத்தோடு கவிதைகள் எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புதுக்கவிதையின் உத்திகள்

### உவமை

தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை உணர்த்துவது உவமை ஆகும். பொருள் உணர்த்தும் முறைகளில் உவமை முதலிடம் பெறுகிறது.

### உருவகம்

உவமையும் பொருளும் வேறுவேறல்ல, ஒன்றே எனக்கருதுமாறு செறிவுற அமைவது உருவகமாகும்.

### படிமம்

உவமை, உருவகம் என்பன மேன்மேலும் இறுகிய நிலையில்தான் படிமம் தோன்றுகிறது. முற்றுருவகப் பாங்கில் அமைந்து, தெளிவாதோர் அகக் காட்சியை வழங்கும் ஆற்றலுடையதே படிமம் ஆகின்றது.

### குறியீடு

ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொல்வதற்குப் பதிலாக அக்கருத்தைத் தன்னகத்தே மறைமுகமாகக் கொண்ட சொற்களையோ, காட்சிகளையோ குறியீடாகப் பயன்படுத்தி எழுதப்படும் கவிதை.

### அங்கதம்

அங்கதம் என்பது நகைப்புடன் கூடிய எள்ளலாகும். இது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்வதாகவும், சமகால நிகழ்வுகளில் எதிரிடைப் பதிவுகளாகவும் அமையும். குற்றங்களைக் கடிந்துரைக்காமல் நகைச்சுவையுடன் சுட்டித் திருத்தவல்ல திறனுடையது அங்கதம்.

### முரண்

ஒன்றுக்கு ஒன்று எதிரானவற்றைக் கொண்டு அமைப்பது முரண் என்னும் உத்தியாகும். மரபுக் கவிதைகளில் இது முரண்தொடை எனக் கூறப்படும். மாறுபட்ட இரு பொருள்களை அடுத்தடுத்து இணைத்துப் பார்ப்பதில் சுவையும் கூடும்; நினைவிலும் நிற்கும்.

www.surabooks.com



விருப்பமான கல்வெட்டு ஆய்வில் 30 ஆண்டுகள் ஈடுபட்டார். இவருடைய காலம் 2.10.1930 முதல் 26.11.2018 வரை ஆகும்.

சிந்துவெளி எழுத்துருவை ஆராய்ந்து அது திராவிட எழுத்து என்று அவர் கண்ட முடிவு, வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது. அவருடைய ஆய்வுகள் ஐந்திற்கும் மேற்பட்ட நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளன.

இவருடைய சாதனைகளில் இமாலயப் பணியாகக் கருதப்படுவது புகளூர் கல்வெட்டு கண்டுபிடிப்பாகும். புகளூர் கல்வெட்டில் காணப்படும் வாசகம் –

**"அம்மன்னன் யாற்றூர் செங்காயபன் உறைய**
**கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்**
**பெருங் கடுங்கோன் மகன் இளங்**
**கடுங்கோ இளங்கோ ஆக அறுத்த கல்"**

இது கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது. இதில் காணப்படும் மன்னர்கள் பதிற்றுப்பத்தின் 7ஆவது, 8–ஆவது மற்றும் 9–ஆவது பாட்டுடைத் தலைவர்கள் ஆவர்.

தென்தமிழ் நாட்டில் உள்ள குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் '**பிராம்மி**' வரிவடிவத்துடன் **தமிழி, தரமிழி, திராவிடி**' என்கிற வெவ்வேறு வரிவடிவங்கள் இருப்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. சங்ககாலக் கல்வெட்டுகள், இலக்கியத் தரவுகள் ஆகியவற்றில் உள்ள பிராம்மி எழுத்துகளுக்கும், அசோகர் காலத்திய பிராம்மி வரிவடிவத்திற்கும் உள்ள முரண்பாடுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளை ஆராய்ந்த ஐராவதம் மகாதேவன் தன்னுடைய '**எர்லி தமிழ் எபிகிராபி**' என்ற ஆய்வு நூலில் இதனைத் தெளிவுப்படுத்தியுள்ளார்.

தமிழ் மொழியை எழுதப் பயன்படுத்தப்பட்ட பழந்தமிழ் வடிவத்தை தமிழ்ப் பிராம்மி என்று குறிப்பிடாமல் '**தமிழி**' அல்லது '**பழந்தமிழ்**' என்று அழைக்க வேண்டும் என்று இவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் குகைக் கல்வெட்டுகள் சங்ககால பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுடையவை என்றும் அவை கி.மு. 2–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதையும் இவர் கண்டறிந்தார்.

மதுரையிலுள்ள மாங்குளத்தில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் – பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பாறை காணப்படுகிறது.

**இவர் பெற்ற விருதுகள் :**

- ஜவஹர்லால் நேரு ஆய்வறிஞர் விருது (1970)
- இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது (1992)
- தாமரைத் திரு விருது (2009)

# தமிழ் சமுதாய வரலாறு

## தொன்மைத் தமிழகம்

தமிழ்நாடு தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. முதல் மாந்தன் தோன்றிய இலெமூரியா 'மனித நாகரிகத்தொட்டில்' எனப்பட்டது. பண்டைத்தமிழகம் குமரிமுனைக்குத் தெற்கே விரிந்து குமரிமலை, பஃறுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கியிருந்தது.

**பஃறுளி ஆற்றுடன் பன்மலைஅடுக்கத்துக்**
**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள** – ***சிலப்பதிகாரம்***

**திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்**
**மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்**
– **பாரதிதாசன்**

- வரலாற்றாசிரியர் பலரும் கிறித்துவ ஊழித் தொடக்கத்திற்கு முன்பே மதுரையில் தமிழ்சங்கம் இருந்திருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இத்தகைய மரபுச் செய்தி வேறெங்கும் இல்லை என்பது **தனிநாயகம் அடிகளின்** கூற்றாகும்.
- தமிழ்ச்சங்கம் இருந்தது என்பதனை '**தமிழ்கெழுகூடல்**' என்று புறநானூறும், '**தமிழ்வேலி**' என்று பரிபாடலும் '**கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்**' என்று மணிவாசகமும் குறிப்பிடுகின்றன.
- பண்டைத் தமிழகத்தில் நடைபெற்ற ஏற்றுமதி இறக்குமதி குறித்து பட்டினப்பாலையும் மதுரைக் காஞ்சியும் கூறுகின்றன.

**"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**மயங்கிய நனந்தலை மறுகு"** – **பட்டினப்பாலை**

- தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன. '**நரம்பின் மறை**' என்று தொல்காப்பியர் உரைப்பதன் மூலம் இசை இலக்கண நூல் இருந்ததை அறிந்துகொள்ள முடிகிறது. தமிழர் வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்புவரைக்கும் இசையே முதன்மை பெறுகிறது. பாணன், பாடினி, கூத்தன், விறலி என்று இயலிசை நாடகக் கலைஞர்கள் இருந்தமையை அறியமுடிகிறது.

### தொன்மைத் தமிழகம்

**சொல்லின் செல்வர் ரா.பி.சே.யின் கூற்று :**

ஏரினால் விளையும் உணவுப் பொருள்களை எல்லாம் ஒரு சொல்லால் உணர்த்தினர் தமிழ்நாட்டார்.

நெல்லும் புல்லும், வரகும் தினையும், எள்ளும் கொள்ளும் அவரையும் துவரையும், பயறும் உளுந்தும், சாமையும் பிறவும் **கூலம்** என்ற ஒரு சொல்லாலேயே குறிக்கப்பட்டன. முற்காலத்தில் கூலக்கடை என்பது பலவகைத் தானியங்கள் விற்கும் கடைக்குப் பெயராக அமைந்திருந்தது. மதுரை மாநகரில் கூலக்கடை வைத்திருந்த சாத்தனார், 'கூலவணிகன் சாத்தனார்' என்று பெயர்பெற்றார். அவரே 'மணிமேகலை' என்ற காப்பியத்தை இயற்றினார். சோழநாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்திலும், பாண்டிநாட்டின் தலைநகரான மதுரையிலும் '**கூலங்குவித்த கூல வீதிகள்**' இருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

அந்நாளில் இசையரங்குகளிலும், நடனசாலைகளிலும், நாடாளும் மன்னனை வாழ்த்திய பின்பு, உணவளிக்கும் உழவனை இசைவாணர்கள் வாழ்த்துவர். 'பதினெண் கூலமும் உழவர்க்கு மிகவே' என்னும் வாழ்த்துரை ஒரு பழைய இசைநூலில் காணப்படுகிறது.

- இன்றைய கர்நாடக இசைக்குத்தாய் தமிழிசையே '**பண்ணொடு தமிழொப்பாய்**' என்னும் தேவாரம் பண்ணும் தமிழும் பிரிக்க முடியாதது என்று கூறுகிறது.
- பிறந்தவுடன் பாடப்படுவது 'தாலாட்டு' இறந்தபின்பு பாடப்படுவது 'ஒப்பாரி'. ஒப்பாரி என்பது 'இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர்', என்ற பொருளுடன் பாடப்படுவது.
- **ஒக்கூர் மாசாத்தியார்** என்ற பெண்பாற் புலவர் பெண்களின் பெருவீரத்தினைப் பற்றி பாடியுள்ளார்.
- '**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே**' என்ற புறப்பாடல் வீரத்தினை முதன்மையாக்குகிறது.
- உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.



enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



# பழந்தமிழர் சமூக வாழ்க்கை

| பண்டைத்தமிழர் வாழ்ந்த முறைகள் | பண்புகள் |
|---|---|
| அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை | இல்லறம் |
| உண்பது நாழி உடுப்பவை இரண்டே | எளிய வாழ்க்கை |
| செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்த்தல் | உயர்பண்பு |
| கொள்வதும் மிகை கொளது கொடுப்பதுவும் குறைபடாது வாழ்தல் | கொள்கைச் சிறப்பு |
| களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே | வீரம் |
| அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு | தூய அன்பு |
| யாதும் ஊரே, யாவரும் கேளிர் | உலகப் பொதுமை |

**விழாக்கள் :**

தைத் திங்கள் நோன்பு, தை நீராடல், கார்த்திகைத் திருநாள், திருவாதிரை விழா, பங்குனி உத்திர விழா, இந்திர விழா, வேலன் வெறியாட்டு விழா, இளவேனில் விழா போன்ற விழாக்களைக் கொண்டாடியதை அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் முதலிய இலக்கியங்கள் கூறுகின்றன.

**பழக்க வழக்கங்கள்**

- தீமூட்டக் கல்லை உரசுவது.
- நேரத்தையும் காலத்தையும் நிலவு, விண்மீன்கள், கோள்கள், மலர்கள் பூக்கும் வேளை ஆகியவற்றைக் கொண்டு கணக்கிடுவது
- இறந்ததோரை முதுமக்கள் தாழியில் இட்டுப் புதைப்பது.
- வீட்டிற்கு வெளியே வந்து விருந்தினரை வழியனுப்புவது போன்ற பழக்கங்கள் இருந்தன.

**விழாக்கள்**

**"அறுமீன் சேரும் அகலிரு நடுநாள்**
**மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி"** –அகநானூறு 141

**பொருள் :** வானில் சிறு முயலாகிய மறுவின் நிறம் விளங்கித் தோன்ற, மதி நிறைந்த கார்த்திகை நன்னாளில், இருள் அகன்ற நள்ளிரவில், வீதிகளில் திருவிளக்குகள் ஏற்றப்பட்டன ;மாலைகள் தொங்கவிடப்பட்டன.

அறுமீன் – கார்த்திகை ; மறுகு – தெரு ; தூக்குதல் – தொங்கவிடுதல்

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட்டு அயர்ந்த காந்தளும்"** – தொல். புறத்திணையியல்

**பொருள் :** வெறியாடலின் சிறப்பினை அறிந்த கொடிய வாயினை உடைய வேலன் ஆடிய காந்தளும்.

**தமிழரின் வழிபாட்டு முறைகள்**

1. **திணைநிலத் தெய்வ வழிபாடு :** குறிஞ்சி – முருகன், முல்லை – திருமால், மருதம் – இந்திரன், நெய்தல் – வருணன், பாலை – கொற்றவை. வெற்றியைக் கொண்டாடவும் கொற்றவை வழிபாடு இருந்தது.
2. **இயற்கை வழிபாடு :** ஞாயிறு, நிலவு, நெருப்பு
3. **நடுகல் வழிபாடு :** போரில் விழுப்புண்ணோடு இறந்துவிட்ட வீரர்களுக்கு செய்வது நடுகல் வழிபாடு.

**வழிபாடு**

**"நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர் தொறும்**
**பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்"** – அகநானூறு 67

**பொருள் :** தம் ஆநிரைகளை மீட்க வேண்டி வெட்சியாருடன் நற்போரிட்டு வென்று வீரமரணமடைந்த மானம் மிகுந்த மறவர்களுடைய பெயரினையும் சிறப்பினையும் நடுகற்களில் பொறித்தனர்.

**ஆடை அணிகலன்கள்**

**ஆடவர் –** இடையில் ஓர் ஆடையும், மேலே ஒரு துண்டும் அணிந்தனர். ஒரு சிலர் மேற்சட்டை அணிந்தனர். மேற்சட்டை 'கஞ்சுகம்' எனப்பட்டது.

**பெண்டிர் –** புடவை அணிந்தனர். பட்டு, பருத்தியாலான ஆடைகளை அனைவரும் அணிந்தனர். மெல்லிய இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகள் பாம்பின் சட்டையைப் போலவும், புகையைப் போலவும், பாலாவி போலவும் விளங்கியதாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

துணிகளுக்கு வண்ணம் ஏற்றும் கலையையும் பழந்தமிழர் அறிந்திருந்தனர். துணி தைப்பவரை '**துன்னக்காரர்**' என்று அழைத்தனர்.

**"புகைவிரிந்தன்ன பொங்கு துகில் உடீஇ"** – புறம் 398

**பொருள் :** தன் இடையில் உடுத்தியிருந்த புகையை விரித்தாற்போன்ற உயர்ந்த உடையைத் தந்து என்னை உடுப்பித்தான்.

**"ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம்"** – பெரும்பாணாற்றுப்படை

**பொருள் :** உடலுக்கியைப் பாலாவியை ஒத்த நூலாற் செய்த துகில்களை உடுக்கச் செய்வான். கலிங்கம் – உடை

**பெண்கள் அணிந்த அணிகலன்கள் :** சிலம்பு, மேகலை, குழை, மோதிரம், கடகம்

**சிறுவர் அணிந்த அணிகலன் :** ஐம்படைத்தாலி (கழுத்தணி)

**பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுகள்**

ஏறுதழுவுதல், மற்போரிடல், கோழிச்சண்டை, ஆட்டுக்கிடாய்ச் சண்டை நடைபெற்றதை சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. யானைச் சண்டை நடைபெறுவதும் வழக்கத்தில் இருந்துள்ளது.

**பெண்களின் விளையாட்டுகள்**

கழங்காடல், அம்மானை, பந்தாடுதடுதல், ஓரையாடுதல்

நகர்ப்புற மக்கள் மேடை அமைத்து இசை, நாட்டியம், நாடகம் ஆகியவற்றைக் காண்பதை பொழுது போக்காகக் கொண்டிருந்தனர்.

**தமிழர் உணவு**

- பண்டைத் தமிழர் உணவு இயற்கை உணவாகவும் உடலைப் பாதுகாக்கும் மருந்தாகவும் இருந்தது.
- அவரவர் வாழிடத்திற்கேற்ப உணவு வேறுபட்டது.
- காய்கனி, இறைச்சி என இருவகை உணவையும் உட்கொண்டனர்.
- நெல்சோற்றை நண்டுக்கறியோடும், காய்கறியோடும் உண்டனர்.
- கடுகு இட்டுத் தாளிக்கும் பழக்கம் இருந்தது.
- ஊறுகாய் போடும் பழக்கமும் நடைமுறையில் இருந்தது.
- அரிசி, தினை, வரகு போன்றவற்றையும் உண்டனர்.

**"அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு**
**சுவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்"**
– சிறுபாணாற்றுப்படை அடி 194 & 195

**பொருள் :** குற்றப்பட்ட சிறந்த வெண்சோற்றுக் கட்டியை நண்டினது கலவையோடு உண்ணத் தருவாள்.

**பண்டைத் தமிழர் திருமணமுறை :**

- அகவாழ்வைப் பாடுவது அன்பின் ஐந்திணை எனப்பட்டது.
- பெண்ணுக்கு மணமகன் பரிசம் அளிப்பதும், மணநிகழ்வின் போது மணமக்களை நெல்லும் மலரும் கலந்த நீரால் நீராட்டி, தூய ஆடை



enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



**பெரியார் எதிர்த்தவை:** இந்தித் திணிப்பு, குலக்கல்வித் திட்டம், தேவதாசி முறை, கள்ளுண்ணல், குழந்தைத் திருமணம், மணக்கொடை.

**பெரியார் விதைத்த விதைகள்:** கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, பெண்களுக்கான சொத்துரிமை குடும்பநலத் திட்டம், கலப்புத் திருமணம், சீர்திருத்தத் திருமணச் சட்ட ஏற்பு.

**பெரியார் இயக்கமும் இதழ்களும்:**

| | |
|---|---|
| தோற்றுவித்த இயக்கம் | சுயமரியாதை இயக்கம் |
| தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு | 1925 |
| நடத்திய இதழ்கள் | குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்) |

**பெரியாரின் சிந்தனைகள்:** அறிவுலகின் திறவுகோல், பகுத்தறிவுப்பாதைக்கு வழிகாட்டி, மனிதநேயத்தின் அழைப்புமணி, ஆதிக்கச் சக்திகளுக்கு எச்சரிக்கை ஒலி, சமூகச் சீர்கேடுகளைக் களையும் மாமருந்து.

**தந்தைப் பெரியாரின் சிறப்புப் பெயர்கள்:**

பகுத்தறிவுப் பகலவன், சுயமரியாதைச் சுடர் வைக்கம் வீரர்,பெண்ணினப் போர்முரசு, ஈரோட்டுச் சிங்கம், புத்துலகத் தொலை நோக்காளர், 'தெற்காசியாவின் சாக்ரடீஸ்' 27.06.1970 – இல் ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனம் தந்தைப் பெரியாருக்கு '**தெற்காசியாவின் சாக்ரடீஸ்**' என்று பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

**பெரியாரின் கூற்றுகள்:**

"சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது. மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது. மனிதர்களை இழிவுபடுத்துகிறது. அந்தச் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும்.

"அறிவியலுக்குப் புறம்பான செய்திகளையும், மூடப் பழக்கங்களையும் பள்ளிகளில் கற்று தரக்கூடாது. சுயசிந்தனை ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கும் கல்வியைக் கற்றுத்தரவேண்டும்"

"இன்றைய அறிவியல் வளர்ச்சிக் கேற்ற நூல்கள் தமிழில் படைக்கப்பட வேண்டும்.

"மொழியோ நூலோ இலக்கியமோ எதுவானாலும் மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்"

"திருக்குறளைப் படிப்பவர்கள் சுயமரியாதை உணர்ச்சியைப் பெறுவார்கள்".

- ✦ அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும்.
- ✦ அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போதுதான் நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும்.
- ✦ **பாரதிதாசன் பெரியாரைப் பற்றி எழுதிய கவிதை**

**"தொண்டு செய்து பழுத்த பழம்**
**தூயதாடி மார்பில் விழும்**
**மண்டைச் சுரப்பை உலகு தொழும்**
**மனக் குகையில் சிறுத்தை எழும்"**

## அறிஞர் அண்ணா

- ✦ தமிழக மக்களால் பேரறிஞர் என்று அழைக்கப்பட்ட சி.என். அண்ணாதுரை அவர்கள் 15.09.1909 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவர் நீதிக்கட்சியின் வாயிலாக அரசியலில் நுழைந்தார். சாதி சமய மற்றும் ஏற்ற தாழ்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தார்.
- ✦ தமிழ்ப்பற்று மிகுந்த இவர் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு இந்திமொழிக்கு எதிராகக் குரல் கொடுத்தார். 1944–இல் நீதிகட்சியின் பெயரை 'திராவிடர் கழகம்' என மாற்றம் செய்தார்.
- ✦ 1949–இல் திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் புதிய கட்சியைத் தொடங்கி, 1967–இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று தமிழகத்தின் முதலமைச்சர் ஆனார். தனது ஆட்சிக்காலத்தில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- ✦ சித்திரை முதல் தேதியை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்தார். (14.04.1967) 1967–ஆம் ஆண்டு ஏப்ரல் 16–ஆம் நாள் சென்னை மாநிலம் என்பதை **தமிழக அரசு** அல்லது **தமிழகம் எனப் பெயர்** மாற்றம் செய்தார்.
- ✦ புனித ஜார்ஜ்கோட்டையில் அமைந்துள்ள செகரடேரியட் என்பதை '**தலைமைச் செயலகம்**' எனப் பெயர் மாற்றம் செய்தார். சத்யமேவ ஜெயதே என்ற அரசுக் குறிக்கோளை '**வாய்மையே வெல்லும்**' என்று மாற்றி அறிவித்தார். இதுபோன்று ஸ்ரீ, ஸ்ரீமதி மற்றும் குமாரி போன்ற சமஸ்கிருத வார்த்தைகளுக்கு மாற்றாக திரு, திருமதி மற்றும் செல்வி தமிழ் சொற்களை அறிவித்தார்.
- ✦ அண்ணாவின் தலைமைப்பண்பு, நிர்வாக நேர்மை, அரசியல் பண்பாடு ஆகியவற்றை சிறப்பிக்கும் வகையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1968–ஆம் ஆண்டு கௌரவ டாக்டர் பட்டம் அளித்து அண்ணாவைப் பாராட்டியது. இத்தகைய பெருமைமிகு அண்ணாதுரை, பிப்ரவரி 3, 1969–ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
- ✦ பேரறிஞர் அண்ணா தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கினார். எழுத்தாளரான அண்ணாவை '**தென்னகத்துப் பெர்னாட்ஷா**' என்று அழைத்தனர்.
- ✦ சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் முதல் இன்பஒளி வரை பல படைப்புகளைத் தந்தவர்.
- ✦ தம்முடைய திராவிட சீர்திருத்தக் கருத்துகளை நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக முதன்முதலில் பரப்பியவர் இவரே.
- ✦ 1935 –இல் சென்னை, பெத்தநாயக்கன் பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார்.
- ✦ **ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்:** ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம் நாடு, திராவிட நாடு, மாலைமணி, காஞ்சி.
- ✦ **துணையாசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்:** குடியரசு, விடுதலை.
- ✦ முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் **இருமொழிச் சட்டத்தை** உருவாக்கினார்.
- ✦ **அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகள்:**
- ✦ மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.
- ✦ கத்தியைத் தீட்டாதே உந்தன் புத்தியைத் தீட்டு. வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தியாகும்.
- ✦ எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
- ✦ சட்டம் ஒரு இருட்டறை. அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
- ✦ மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை. தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை.
- ✦ நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
- ✦ இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை.
- ✦ இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்.
- ✦ நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

## முத்துராமலிங்கத் தேவர்

பெயர் : முத்துராமலிங்கத் தேவர்

பெற்றோர் : உக்கிரபாண்டியனார் – இந்திராணி அம்மையார்



enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



ஆசிரியர் : குறைவற வாசித்தான்
பிறந்த இடம் : இராமநாதபுரம் மாவட்டம்–பசும்பொன்
காலம் : 30.10.1908 முதல் 30.10.1963 வரை

- இளம் வயதிலேயே இவரது அன்னையை இழந்தார். அதனால் பாட்டியின் அரவணைப்பிலும் இஸ்லாமியப் பெண்மணி ஒருவரின் அரவணைப்பிலும் வளர்ந்தார்.
- தொடக்கக் கல்வியை கமுதியிலுள்ள கிறித்தவப் பாதிரியார்களிடமும், உயர்நிலைப் பள்ளியை சில ஆண்டுகள் பசுமலையிலும் பயின்றார்.
- பின்னர் ஐக்கிய கிறித்தவப் பள்ளியிலும், 10–ஆம் வகுப்பை அரசு உயர்நிலைப் பள்ளியிலும் படித்தார்.
- இராமநாதபுரத்தில் பிளேக் நோய் பரவியதால் இவருடைய கல்வியும் நின்றுவிட்டது.
- பட்டறிவை மிகுதியாகப் பெற்ற இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லமை பெற்றார். சொற்பொழிவாற்றும் திறமையும் பெற்றார்.
- சிலம்பம், குதிரையேற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகியனவற்றைக் கற்றறிந்ததுடன் இளமையிலேயே அரசியலிலும் ஆர்வம் கொண்டார்.

1943–45 –ஆம் ஆண்டுகளில் சென்னை சிறையில் இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த 18 இளைஞர்கள் தூக்கிலிடப்பட்டனர். அவர்களில் 18 வயதே ஆன இராமு மற்றும் அப்துல்காதர் தூக்கிலிடப்படுவதற்கு முன்பு கூறிய கூற்றுகள் பின்வருமாறு:

"நான் என் உயிரைக் கொடுப்பதற்குக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஏனெனில் நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை". – ராமு.

"வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர்நீத்த முழுநிலவினைப் போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திகள்தான்"

இந்திய தேசிய இராணுவத்திலிருந்து வான்படைத் தாக்குதலுக்காக நேதாஜியால் 45 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள் பயிற்சிக்காக ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடாமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்தப் பயிற்சிப் பிரிவின் பெயர் '**டோக்கியோ கேடட்ஸ்**'.

பேராசிரியர் மா.சு. அண்ணாமலை "இந்திய தேசிய இராணுவம் – தமிழர்பங்கு" என்ற நூலுக்காக தமிழக அரசின் பரிசு பெற்றவர். இவர் தலைமையில் எடுக்கப்பட்ட குறும்படங்கள் சர்வதேச அளவில் பரிசு பெற்றன.

- 32 சிற்றூர்களில் தனக்குச் சொந்தமாக இருந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கினார்.
- நிலக்கிழார் ஒழிப்பு, ஆலய நுழைவுப் போராட்டம் ஆகியவற்றிற்காகப் போராடினார்.
- சமபந்தி முறைக்கு ஊக்கமளித்தார்.

"நேதாஜியே தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார் – பசும்பொன் முத்துராமலிங்கர்.

நேதாஜி தலைமையில் இருந்த இந்தியதேசிய இராணுவத்திற்கு தமிழகத்திலிருந்து பெரும்படையைத் திரட்டி அனுப்பி வைத்தவர் பசும்பொன் முத்துராமலிங்கனார்.

"இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தாம்" – தில்லான். (இந்திய தேசிய இராணுவத்தின் படைத் தலைவர்)

"மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது" என்று சர்ச்சில் ஏளனம் செய்தார். அதற்கு நேதாஜி "இந்தத் தமிழினம் தான் ஆங்கிலேயர்களை அழிக்கும்" என்று பதில் கூறினார்.

- இவர் காலத்தில் ஆங்கில அரசால், குற்றப் பரம்பரையினர் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்காகப் போராடி விடுதலைப் பெற்றுத் தந்தார்.'

**நேதாஜியின் பொன்மொழிகள்:**

அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மனம் ஒப்ப இடம் தருதல் மிகப் பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வைத் தந்தே ஆக வேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும். எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்குப் போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்.

மனதை மலர வைக்கும் இளங்கதிரவனின் வைகைறைப் பொழுது வேண்டுமா? அப்படியானால் இரவில் இருண்ட நேரங்களில் வாழக் கற்றுக்கொள்.

விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும் சுதந்திரத்தினால் உண்டாகும் மனத்திருப்தியும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலையுண்டு. அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும்தான்.

- "சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை; ஆண்டவன் மனித குலத்தைப் படைத்தானே தவிர சாதியையும் நிறத்தையும் அல்ல; சாதியும் நிறமும் அரசியலுக்கும் இல்லை; ஆன்மிகத்திற்கும் இல்லை" என்று கூறினார்.
- வங்காளச் சிங்கமான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களைத் தம் அரசியல் வழிகாட்டியாகக் கொண்டார்.
- விடுதலைப் போர் கடுமையாக இருந்த காலத்தில் ஆங்கில அரசு வட இந்தியாவில் திலகருக்கும் தென்னிந்தியாவில் முத்துராமலிங்கருக்கும் 'வாய்ப்பூட்டுச் சட்டம்' போட்டது.
- திரு.வி.கல்யாணசுந்தரனார் இவருக்கு 'தேசியம் காத்த செம்மல்' என்ற பட்டத்தை வழங்கினார்.
- பொது வாழ்விற்காக திருமண வாழ்வினைத் தவிர்த்தார்.
- 1937, 1946, 1952, 1957, 1962 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்றார்.
- "வீரமில்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும்" என எடுத்துரைத்தார்.
- வேதாந்த பாஸ்கர், பிரணவ கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்த சமய மேதை என்று பலவாறாகப் பாராட்டப் பெற்றவர்.
- "பனைமரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு; வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு" என்று வாழ்க்கையின் நிலையாமைத் தத்துவத்தைக் கூறியுள்ளார்.
- மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் எனக் குறிப்பிடுகிறார்.

**முத்துராமலிங்கர் வாழ்ந்த முறை :**

விவேகானந்தரின் தூதராக, நேதாஜியின் தளபதியாக, சத்தியசீலராக, முருக பக்தராக, ஆன்மிகப் புத்திரராக, தமிழ்பாடும் சித்தராக, தென்பாண்டிச் சீமையின் முடிசூடா மன்னராக, நீதிவழுவா நேர்மையாளராக, புலமையில் கபிலராக, வலிமையில் கரிகாலனாக, கொடையில் கர்ணனாக, பக்தியில் பரமஹம்சராக, இந்தியத் தாயின் நன்மகனாக வாழ்ந்தார்.

- தன் சொத்துக்களை 17 பாகங்களாகப் பிரித்து தனக்கு ஒரு பாகத்தை மட்டும் வைத்துக் கொண்டு மீதி 16 பாகங்களையும் 16 பேருக்கு இனாம் சாசனமாக எழுதி வைத்தார்.
- தமிழக அரசு இப்பெருமகனாருக்கு சென்னையில் இவரின் திருவுருவச் சிலையை நிறுவி, அச்சிலை நிறுவப்பட்டுள்ள சாலைக்கு இவர் பெயரைச் சூட்டியுள்ளது.
- 06.09.1939–இல் இவரின் விருப்பத்திற்கிணங்க மதுரைக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வருகை புரிந்தார்.
- 1995–இல் நடுவண் அரசு இவருடைய உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டது.



enquiry@surabooks.com Ph: 9840455556

114. 'தொண்டர் சீர் பரவுவார்' என்று போற்றப்பட்டவர்
A) நம்பியாண்டார் நம்பி B) சுந்தரர்
C) சேக்கிழார் D) அப்பர் விடை : (C)

115. கீழ்க்கண்ட பாடலின் பொருத்தமான திருக்குறளைத் தேர்க.
பாடல்
ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்
ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம் செய்-மாண்பற்ற
காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.
A) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் என்
B) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியான் வென்று விடல்
C) குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்கக் கொளல்
D) மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழில் அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு விடை : (B)

116. தீரா இடும்பை தருவது எது?
A) ஆராயாமை, ஐயப்படுதல் B) குணம், குற்றம்
C) பெருமை, சிறுமை D) நாடாமை, பேணாமை
விடை : (A)

117. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a) | பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று | 1. | ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல் |
| b) | தத்தம் கருமமே கட்டளைக்கல் | 2. | அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும் |
| c) | அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | 3. | சுடாத மண்கலத்தில் நீருற்றி வைப்பதைப் போல |

குறியீடுகள் :

| | a) | b) | c) |
|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 |
| B) | 3 | 2 | 1 |
| C) | 2 | 3 | 1 |
| D) | 1 | 3 | 2 |

விடை : (A)

118. "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே"
– இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
A) நுகர்தல் B) தொடு உணர்வு
C) கேட்டல் D) காணல்
விடை : (A)

119. கீழ்க்கண்டவற்றில் பொருந்தாததைத் தேர்க.
A) விளித்தொடர்
B) வினைத்தொகை
C) ஆறாம் வேற்றுமைத் தொகை
D) வியங்கோள் வினைமுற்று விடை : (C)

குறிப்பு : ஆறாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகும். ஏனையவற்றில் வல்லினம் மிகாது.

120. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a) | சிறுபஞ்சமூலம் | 1. | காப்பிய இலக்கியம் |
| b) | குடும்ப விளக்கு | 2. | சங்க இலக்கியம் |
| c) | சீவகசிந்தாமணி | 3. | அற இலக்கியம் |
| d) | குறுந்தொகை | 4. | தற்கால இலக்கியம் |

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 2 | 3 | 4 | 1 |

விடை : (A)

121. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி
A) குறிஞ்சி B) நெய்தல்
C) முல்லை D) பாலை விடை : (C)

122. 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' யார் கனவில் யார் அதிரப் புகுந்தார் ?
A) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்.
B) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்.
C) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்.
D) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான். விடை : (D)

123. "அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்" இப்பாடலடிகளில் பயின்று வந்துள்ள நிலப்பகுதி எத்திணைக்கு உரியதாகும்
A) குறிஞ்சி B) முல்லை
C) மருதம் D) நெய்தல்
விடை : (A)

124. "காய் மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றி
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து"
மேற்கண்ட பாடலடிகள் எந்த நாட்டின் சிறப்பைக் கூறுகின்றன?
A) பாண்டிய நாடு B) ஏமாங்கத நாடு
C) சோழநாடு D) பல்லவ நாடு
விடை : (B)

125. நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு – இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே
A) பாண்டிய நாடு, சேரநாடு B) சோழநாடு, சேரநாடு
C) சேரநாடு, சோழநாடு D) சோழநாடு, பாண்டியநாடு
விடை : (C)

126. வெறிகமழ் கனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது ?
A) மணம் கமழும் வயலில் உழவர் கூட்டம் வெள்ளம்போல் நிறைந்திருந்தனர்.
B) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்.
C) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்.
D) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.
விடை : (A)

127. ஏமாங்கத நாட்டில் நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது யாரைப் போல் உள்ளது என்று திருத்தக்கத் தேவர் கூறுகிறார்?
A) பக்குவம் இல்லாத செல்வந்தர்
B) பணிவு இல்லாத மாணவன்
C) செருக்கு உடைய போர்வீரன்
D) பொறுமை இல்லாத அமைச்சன் விடை : (A)

128. முத்தொள்ளாயிரம் என்ற நூல் எவ்வகை பாவினால் இயற்றப்பட்டுள்ளது.
A) வெண்பா B) ஆசிரியப்பா
C) வஞ்சிப்பா D) கலிப்பா
விடை : (A)

129. விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் ?
A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை
C) சீவகசிந்தாமணி D) வளையாபதி
விடை : (C)



enquiry@surabooks.com Ph: 9840455556

130. 'நரி விருத்தம்' என்ற நூலின் ஆசிரியர்
A) செயங்கொண்டார் B) சேக்கிழார்
C) சீத்தலைச் சாத்தனார் D) திருத்தக்கத் தேவர்
விடை : (D)

131. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது
– இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது ?
A) நாள் B) மலர்
C) காசு D) பிறப்பு
விடை : (D)

132. 'முண்டி மோதும் துணிவே இன்பம்' – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது
A) மகிழ்ச்சி B) வியப்பு
C) துணிவு D) மருட்சி
விடை : (C)

133. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை
A) நிலையற்ற வாழ்க்கை B) பிறருக்காக வாழ்தல்
C) இம்மை மறுமை D) ஒன்றே உலகம்
விடை : (D)

134. 'யா' மரம் எந்த நிலத்தில் வளரும் ?
A) குறிஞ்சி B) மருதம்
C) பாலை D) நெய்தல்
விடை : (C)

135. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை
– இக்குறளில் பயின்று வந்துள்ள அணி யாது ?
A) சொல் பின்வருநிலையணி
B) பொருள் பின்வருநிலையணி
C) சொற்பொருள் பின்வருநிலையணி
D) வஞ்சப் புகழ்ச்சி அணி
விடை : (B)

136. "பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்"
இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்
A) நற்றிணை B) குறுந்தொகை
C) அகநானூறு D) புறநானூறு
விடை : (B)

137. சந்தக் கவிமணி தமிழழகனார் எழுதிய சிலேடைப் பாடலில் தமிழை எதனுடன் ஒப்பிட்டுள்ளார்?
A) ஆகாயம் B) இமயமலை
C) கடல் D) சூரியன்
விடை : (C)

138. தமிழையும் கடலையும் ஒப்பிட்டுக் கவி பாடியவர் யார்?
A) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர்
B) ஒட்டக்கூத்தர்
C) சந்தக்கவிமணி தமிழழகனார்
D) இரட்டைப் புலவர்கள்
விடை : (C)

139. தமிழழகனார் எத்தனை சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்?
A) பத்து B) பன்னிரண்டு
C) பதினான்கு D) பதினாறு
விடை : (B)

140. தமிழுக்குரிய அணிகலன் ...............
A) எட்டுத்தொகை B) பத்துப்பாட்டு
C) ஐம்பெருங்காப்பியம் D) சிலப்பதிகாரம்
விடை : (C)

141. சந்தக் கவிமணி என்று குறிப்பிடப்படுபவர் .............
A) பெருஞ்சித்திரனார் B) இலக்குவனார்
C) தமிழழகனார் D) தேவநேயப் பாவாணர்
விடை : (C)

142. கடல் ............... வகையான சங்குகளைத் தருகிறது.
A) இரண்டு B) மூன்று
C) நான்கு D) ஐந்து
விடை : (B)

143. திருமந்திரத்தில் மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாக்கும் என்று கூறியவர் .................
A) திருமூலர் B) தொல்காப்பியர்
C) ஔவையார் D) திருமூலர்
விடை : (A)

144. செய்தி 1 – உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்று கூறியவர் தொல்காப்பியர்.
செய்தி 2 – திருக்குறளில் வாயுதாரணை என்ற அதிகாரம் அமைந்துள்ளது.
செய்தி 3 – 'வண்டோடு புக்க மணவாய்த் தென்றல்' என்று கூறியவர் இளங்கோவடிகள்.
A) செய்தி 1 மட்டும் சரி
B) செய்தி 1 மற்றும் 2 சரியானவை
C) செய்தி 3 மட்டும் சரி
D) செய்தி 1 மற்றும் 3 சரியானவை
விடை : (D)

145. "வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுள் பெருக்கம்உண் டாம்" – எனப் பாடியவர்
A) தொல்காப்பியர்
B) திருமூலர்
C) ஔவையார்
D) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்
விடை : (C)

145. 'பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது' என்ற சிற்றிலக்கியத்தை இயற்றியவர் .............
A) ஐயூர் முடவனார்
B) மதுரை இளநாகனார்
C) திருமூலர்
D) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்
விடை : (D)

146. "நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!" என்ற பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் ...................
A) புறநானூறு B) அகநானூறு
C) தொல்காப்பியம் D) ஔவை குறள்
விடை : (A)

147. "நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களிஇயல் யானைக் கரிகால் வளவ!" என்று பாடிய பெண்பாற் புலவர் யார்?
A) ஔவையார் B) காக்கைப் பாடினியார்
C) நச்செள்ளையார் D) வெண்ணிக் குயத்தியார்
விடை : (D)

148. "வளிமிகின் வலி இல்லை" என்று பாடியவர்
A) ஔவையார் B) திருமூலர்
C) தொல்காப்பியர் D) ஐயூர் முடவனார்
விடை : (D)

149. "வளிமிகின் வலி இல்லை" –பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல்
A) அகநானூறு B) புறநானூறு
C) ஐங்குறுநூறு D) நற்றிணை
விடை : (B)



enquiry@surabooks.com Ph: 9840455556

567. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a) | பாரதியார் | 1. | மாங்கனி |
| b) | பாரதிதாசன் | 2. | மருமக்கள் வழி மான்மியம் |
| c) | கவிமணி | 3. | வீரத்தாய் |
| d) | கண்ணதாசன் | 4. | குயில்பாட்டு |

குறியீடு :

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 4 | 3 | 2 |

விடை : (A)

568. ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தால் செயின் – என்னும் குறள் குறிப்பது
A) வேளாண் மேலாண்மை B) நேர மேலாண்மை
C) நிருவாக மேலாண்மை D) வணிக மேலாண்மை
விடை : (B)

569. 'இலக்கியத்தில் மேலாண்மை' என்ற நூலை எழுதியவர்
A) வெ. இறையன்பு B) வா.மு. சேதுராமன்
C) வெ. சாமிநாத சர்மா D) விந்தன்
விடை : (A)

570. கீழ்க்கண்டவற்றுள் வெ. இறையன்பு அவர்களால் எழுதப்படாத நூல் எது ?
A) வாய்க்கால் மீன்கள் B) ஏழாவது சிரிப்பு
C) உள்ளொளிப் பயணம் D) கானல் வரி
விடை : (D)

571. வெ. இறையன்பு அவர்களால் எழுதப்பட்ட நூல்களில் தமிழ் வளர்ச்சித் துறையின் (1995)–ஆம் ஆண்டில் பரிசினைப் பெற்ற நூல்
A) மூளைக்குள் சுற்றுலா B) ஐ.ஏ.எஸ். படிக்கட்டுகள்
C) வாய்க்கால் மீன்கள் D) ஏழாவது அறிவு
விடை : (C)

572. அகஸ்டஸ் சீசரைப் பாண்டிய நாட்டுத் தூதுக்குழு சந்தித்ததைப் பற்றி தெரிவித்தவர் ...........
A) ஜி.யூ. போப் B) கால்டுவெல்
C) ஸ்ட்ரேபோ D) சீகன்பால்டு
விடை : (C)

573. 'ஹிராக்ளிடஸ்' எழுதிய உலகப் புகழ்பெற்ற ஒற்றை வரி நூல்
A) துளிகள் B) கற்கள்
C) மலர்கள் D) போர்கள்
விடை : (A)

574. 'ஹிராக்ளிடஸ்' எழுதிய உலகப் புகழ்பெற்ற ஒற்றை வரி நூல்
A) துளிகள் B) கற்கள்
C) மலர்கள் D) போர்கள் விடை : (A)

575. 'ஒவ்வொரு நாளும் சூரியன் புதிது' என்று குறிப்பிட்டவர்.
A) ஹிராக்ளிடஸ் B) ஜார்ஜ்
C) எல்லீஸ் துரை D) வின்ஸ்லோ
விடை : (A)

576. நிருவாகத் திறன் குறித்த சுவரோவியம் அமைந்துள்ள இடம்
A) மதுரை B) திருநெல்வேலி
C) தூத்துக்குடி D) கன்னியாகுமரி
விடை : (B)

577. நேர மேலாண்மையைக் கடைப்பிடிக்காத நீச்சல் வீரன் பற்றிய உருவகக் கதை எந்த நாட்டைச் சேர்ந்தது ?
A) இந்தியா B) ஜப்பான்
C) ஜெர்மனி D) சீனா விடை : (D)

578. ஷேக்ஸ்பியரின் 'ஏதன்ஸ் டைமன்' என்ற படைப்பு நமக்கு உணர்த்துவது .............
A) வணிக மேலாண்மை B) நேர மேலாண்மை
C) நிதி மேலாண்மை D) மேலான மேலாண்மை
விடை : (C)

579. 'அதிசய மலர்' என்ற கவிதையின் ஆசிரியர்
A) தமிழ்நதி B) நகுலன்
C) சி. மணி D) சுரதா விடை : (A)

580. 'அதிசய மலர்' என்ற கவிதை இடம்பெற்றுள்ள நூல் ........
A) சூரியன் தனித்தலையும் பகல்
B) இரவுகளில் பொழியும் துயரப் பனி
C) அதன் பிறகும் எஞ்சும்
D) கானல் வரி விடை : (C)

581. கவிஞர் தமிழ்நதியின் இயற்பெயர்
A) தமிழ்வாணி B) கலைவாணி
C) இசைவாணி D) ஷிவானி விடை : (B)

582. கவிஞர் தமிழ்நதியின் தாய் நாடு
A) தமிழகம் B) ஈழம்
C) மலேசியா D) சிங்கப்பூர் விடை : (B)

583. கவிஞர் தமிழ்நதி புலம்பெயர்ந்து சென்ற நாடு ............
A) ஆஸ்திரேலியா B) ஜெர்மனி
C) கனடா D) மலேசியா
விடை : (C)

584. 'கவிஞர் தமிழ்நதி ........... துறையில் பட்டம் பெற்றவர்'
A) தமிழ் B) வரலாறு
C) கலை D) தொல்லியல்
விடை : (C)

585. கவிஞர் தமிழ்நதி பட்டம் பெற்ற பல்கலைக்கழகம் ........
A) தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
B) பேராதனைப் பல்கலைக்கழகம்
C) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
D) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விடை : (D)

586. கீழ்க்கண்டவற்றுள் தமிழ்நதி எழுதிய குறுநாவல் எது ?
A) நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது
B) ஈழம் கைவிட்ட தேசம்
C) கானல் வரி
D) பார்த்ததீனியம் விடை : (C)

587. கீழ்க்கண்டவற்றுள் தமிழ்நதி எழுதிய சிறுகதை எது ?
A) நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது
B) சூரியன் தனித்தலையும் பகல்
C) இரவுகளில் பொழியும் துயரப்பனி
D) ஈழம் : கைவிட்ட தேசம் விடை : (A)

588. 'தேயிலைத் தோட்டப் பாட்டு' என்ற கவிதையை இயற்றியவர்
A) முகம்மது இராவுத்தர் B) முகம்மது காசிம்
C) முகம்மது ரஹ்மான் D) அப்துல் ரஹ்மான்
விடை : (A)

589. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள 'தேயிலைத் தோட்டப் பாட்டு' அமைந்துள்ள வகைப்பாடு .............
A) தாலாட்டுப் பாடல் B) கும்மிப்பாடல்கள்
C) நையாண்டிப்பாடல் D) கதைப்பாடல்கள்
விடை : (B)

590. பஞ்சத்தினால் தமிழர்கள் .........நூற்றாண்டில் புலம் பெயர்ந்தனர்.
A) 17–ஆம் B) 18–ஆம்
C) 19–ஆம் D) 20–ஆம் விடை : (C)

591. புலம் பெயர்ந்து சென்ற தமிழர்களின் நிலை குறித்து பாடியவர்
A) பாரதியார் B) நாமக்கல் கவிஞர்
C) பாரதிதாசன் D) கவிமணி தேசிக விநாயகம்
விடை : (A)

592. 'கங்காணிகள்' என்பவர் .............
A) ஆங்கிலேயர்
B) கடன் வசூலிப்போர்
C) முகவர்கள்
D) தேயிலைத் தோட்ட முதலாளிகள் விடை : (C)

593. தேயிலைத் தோட்டத்தில் இந்தியர்கள் துன்பப்பட்டதற்குக் காரணமாக ஆசிரியர் கூறுவது ...........
A) செல்வ வளம் இல்லாமை
B) கல்வியறிவு இல்லாமை
C) சிந்தனைத்திறன் இல்லாமை
D) தொழில்வளம் இல்லாமை விடை : (B)

594. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் துன்பமான வாழ்வுக்கு ஆசிரியர் கூறியுள்ள உவமை யாது ?
A) வலையில் சிக்கிய மான் B) கூண்டில் அடைப்பட்ட பறவை
C) மண்ணுளிப் பாம்பு D) மண்புழு
விடை : (C)

595. 'ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு' என்பது ...........
A) ஒரு மா B) ஒரு காணி
C) ஒரு வேலி D) ஒரு குழி
விடை : (A)

596. புகளூர் கல்வெட்டு குறித்த உண்மைகளைக் கண்டறிந்தவர்
A) ஐராவதம் மகாதேவன் B) நீலகண்ட சாஸ்திரியார்
C) கே.வி. சுப்பிரமணியனார் D) கோவிந்தராசன்
விடை : (A)

597. ஐராவதம் மகாதேவன் எந்தப் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றார் ?
A) தொல்லியல் ஆய்வாளர்
B) இந்திய ஆட்சிப் பணி அலுவலர்
C) மத்தியத் தொல்லியல் நிறுவன இயக்குநர்
D) வரலாற்றுப் பேராசிரியர் விடை : (B)

598. "சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்" என்ற கட்டுரையை எழுதியவர் .............
A) கல்கி B) சாண்டில்யன்
C) நீலகண்ட சாஸ்திரியார் D) ஐராவதம் மகாதேவன்
விடை : (D)

599. 'சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும்' என்ற கட்டுரையை வெளிவந்த இதழ் ................
A) கல்வெட்டு
B) தென்னிந்திய தொல்துறை ஆய்வுகள்
C) மத்தியத் தொல்துறை ஆய்வுகள்
D) தொல்சான்றுகள் விடை : (A)

600. புகளூர்க் கல்வெட்டுகள் பற்றிய செய்திகள் .......... அறிக்கையில் முதன்முதலாகக் கிடைத்தன.
A) 1926 – 27 தென்னிந்திய கல்வெட்டு
B) 1927 – 28 தென்னிந்திய கல்வெட்டு
C) 1928 – 29 தென்னிந்திய கல்வெட்டு
D) 1929 – 30 தென்னிந்திய கல்வெட்டு விடை : (B)

601. ஆறுநாட்டான் குன்று அமைந்துள்ள இடம் ..................
A) மதுரை B) புகளூர்
C) மகேந்திரமலை D) பல்லாவரம்
விடை : (B)

602. புகளூர் கல்வெட்டில் காணப்படும் 'ஆதன்' என்ற சொல் எந்த மன்னர்களைக் குறிக்கிறது ?
A) பாண்டிய B) சோழ
C) பல்லவ D) சேர விடை : (D)

603. 'செங்காயபன்' என்பவர்
A) புத்தத் துறவி B) சமணத்துறவி
C) சைவத்துறவி D) வைணவத் துறவி
விடை : (B)

604. 'செங்காயபன்' என்ற துறவி .......... என்னும் இடத்தைச் சேர்ந்தவர்.
A) கரூர் B) புகளூர்
C) யாற்றூர் D) காட்டூர் விடை : (C)

605. புகளூர் கல்வெட்டு ஏறத்தாழ ......... நூற்றாண்டைச் சார்ந்தது.
A) கி.மு. 2–ஆம் B) கி.பி. 2–ஆம்
C) கி.மு. 3–ஆம் D) கி.பி. 3–ஆம் விடை : (B)

606. புகளூர் கல்வெட்டில் காணப்பட்ட மூன்று தலைமுறை மன்னர்கள் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ளன.
A) 6, 7, 8 –ஆவது பாட்டுடைத் தலைவர்கள்
B) 5, 6, 7 ஆவது பாட்டுடைத் தலைவர்கள்
C) 7, 8, 9 ஆவது பாட்டுடைத் தலைவர்கள்
D) 3, 4, 5 – ஈவது பாட்டுடைத் தலைவர்கள் விடை : (C)

607. ஐராவதம் மகாதேவன்............ உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டார்.
A) முதலாவது B) இரண்டாவது
C) ஐந்தாவது D) ஆறாவது விடை : (A)

608. ஐராவதம் மகாதேவன் ........... ஆண்டுகள் கல்வெட்டு ஆய்வில் ஈடுபட்டார்.
A) 20 B) 40
C) 30 D) 50 விடை : (B)

609. மாங்குளம் குகைக் கல்வெட்டுகள் யாருடைய காலத்தைச் சேர்ந்தவை ?
A) வரகுணவர்ம பாண்டியன் B) பாண்டிய நெடுஞ்செழியன்
C) பராந்தகப் பாண்டியன் D) ரணதீரப் பாண்டியன்
விடை : (B)

610. தமிழ்நாட்டிலுள்ள பிராமிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர்
A) நீலகண்ட சாஸ்திரியார் B) கே.வி. சுப்பிரமணியனார்
C) ஐராவதம் மகாதேவன் D) ச. வையாபுரி
விடை : (B)

611. ஐராவதம் மகாதேவன் எழுதிய ஆய்வு நூல் ...............
A) தமிழ் வரலாற்றுத் தடங்கள்
B) எர்லி தமிழ் எபிகிராபி
C) தொல்லியல் நோக்கில் சங்ககால சமூகம்
D) இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுகளும் விடை : (B)

612. மாங்குளம் குகைக் கல்வெட்டுகள் ............... காலத்தைச் சேர்ந்தவை.
A) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு
B) கி.மு. மூன்றாம் நூற்றாண்டு
C) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு
D) கி.மு. முதலாம் நூற்றாண்டு விடை : (A)

613. 'பத்மவியூகம்' என்ற நூலின் ஆசிரியர்
A) புதுமைப்பித்தன் B) ஜெயமோகன்
C) ஜெயகாந்தன் D) பி.எஸ். இராமையா
விடை : (B)


enquiry@surabooks.com Ph: 9840455556

www.surabooks.com



614. 'அரவானன்' என்ற நூலின் ஆசிரியர் ..........
A) எஸ். ராமகிருஷ்ணன் B) கு. அழகிரிசாமி
C) தி. ஜானகிராமன் D) மௌனி விடை : (A)

615. முச்சந்தி இலக்கியம் என்பது
கூற்று 1 : கதை வடிவிலான வடிவம் உடையது.
கூற்று 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1, 2 சரி
C) கூற்று 1, 2 தவறு
D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி விடை : (B)

616. ஆராய்ச்சிப் பேரறிஞர் என்ற அடைமொழியால் குறிக்கப்படுவர்.
A) மயிலை சீனி. வேங்கடசாமி
B) சி. இலக்குவனார்
C) தேவநேயப் பாவாணர்
D) பரிதிமாற் கலைஞர் விடை : (A)

617. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களால் எழுதப்படாத நூல் எது ?
A) கிறித்துவமும் தமிழும்
B) களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
C) கொல்லிமலைக் குள்ளன்
D) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் விடை : (C)

618. கூற்று 1 : மயிலையாரின் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் என்னும் நூல் ஒவ்வொரு நூற்றாண்டையும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பெதற்கான முன்னோடி நூல் ஆகும்.
கூற்று 2 : மறைந்துபோன தமிழ்நூல்கள் என்னும் நூல் வேங்கடசாமி அவர்களின் அரிய ஆவணப் பணிகளில் ஒன்றாகும்.
A) கூற்று 1 சரி கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
C) கூற்றுகள் இரண்டும் தவறானவை
D) கூற்று இரண்டும் சரியானவை விடை : (D)

619. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| a) | தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் | 1. | ஆவண முன்னோடி நூல் |
| b) | 19–ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் | 2. | மீட்டுருவாக்க சான்று நூல் |
| c) | தமிழ்நாட்டு வரலாறு | 3. | இலக்கிய ஆய்வு நூல் |
| d) | களப்பிரர் ஆட்சியில் தமிழகம் | 4. | கலையியல் ஆய்வு நூல் |

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| a) | 4 | 1 | 2 | 3 |
| b) | 4 | 3 | 2 | 1 |
| c) | 3 | 4 | 1 | 2 |
| d) | 2 | 4 | 1 | 3 |

விடை : (A)

620. சீனி. வேங்கடசாமியின் ஆய்வுக்கட்டுரைகள் ......... இதழ்களில் வெளியாயின.
1) குடியரசு, ஊழியன்
2) குயில், சுதேசிமித்திரன்
3) செந்தமிழ்ச்செல்வி, லக்ஷ்மி
4) நவசக்தி, திராவிடன்
சரியான விடையளி :
A) 1 மற்றும் 3 B) 2 மற்றும் 4
C) 1 மற்றும் 2 D) 3 மற்றும் 4 விடை : (A)

621. மயிலையார் எழுதிய முதல் நூல் ..........
A) கொங்கு நாட்டு வரலாறு
B) தமிழ்நாட்டு வரலாறு
C) களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
D) கிறித்துவமும், தமிழும் விடை : (D)

622. தமிழின் தொல் இலக்கியம், தொல்கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக மயிலையார் எழுதிய நூல்கள் ..............
A) சாசனச் செய்யுள் மஞ்சரி, மறைந்துபோன தமிழ்நூல்கள்
B) பழங்காலத் தமிழர் வணிகம், தமிழர் வளர்ந்த அழுகுக்கலைகள்
C) பௌத்தமும், தமிழும், சமணமும் தமிழும்
D) கொங்கு நாட்டு வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு
விடை : (C)

623. பொருத்தமற்ற இணையைக் கண்டறி.

| | | | |
|---|---|---|---|
| A) | வட்டெழுத்து, கோலெழுத்து | 1. | புலமைபெற்றவர் வேங்கடசாமி |
| B) | களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்துடன் எழுதப்பட்ட நூல் | 2. | களப்பிரர் ஆட்சியில் தமிழகம் |
| C) | மயிலை சீனி வேங்கடசாமி ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித்துறையில் முதியவர் | 3. | சுவாமி விபுலாணந்த அடிகள் |
| D) | தமிழ்ப் பேரவைச் செம்மல் | 4. | சென்னைப் பல்கலைக்கழகம் |

விடை : (D)

624. மகேந்திரவர்மன் இயற்றிய மத்த விலாசம் என்ற நாடக நூலை ஆங்கிலம் வழியாக தமிழாக்கியவர்
A) முருகுசுந்தரம்
B) தணிகை உலகநாதன்
C) மயிலை சீனி. வேங்கடசாமி
D) பாவலரேறு பாலசுந்தரனார் விடை : (C)

625. ................ என்ற நூலில் மயிலையார் இலக்கிய இலக்கணப்பரப்பில் உறைந்திருந்த செய்திகளைத் தொகுத்து 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளை தருகிறார்.
A) பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்
B) சாதனச் செய்யுள் மஞ்சரி
C) மறைந்துபோன தமிழ்நூல்கள்
D) துளு நாட்டு மன்னர்கள் விடை : (C)

626. பொருத்துக.

| | அரசர்கள் | | மரபு சின்னங்கள் |
|---|---|---|---|
| a) | சேரன் | 1. | புலி |
| b) | சோழன் | 2. | யானை |
| c) | பாண்டியன் | 3. | வில் |
| d) | பசும்பூண் பாண்டியன் | 4. | மீன் |

குறியீடுகள் :

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 1 | 3 | 4 | 2 |
| D) | 2 | 4 | 1 | 3 |

விடை : (A)



enquiry@surabooks.com Ph: 9840455556